பக்கங்கள்-16 15.தை.2017 விலை-30.00




நடுநிலை இதழ்
# தினப்புயல்
PIN news THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -184

## இலங்கையில் சமஸ்டி இல்லையேல் தமிழினம் ஆயுதம் ஏந்திப் போராடுவதைவிட வேறு வழியில்லை



## விடுதலைப்புலிகளின் மீது 30 நாடுகள் இணைந்து போர் தொடுத்தமைக்கான காரணம் என்ன?

## இலங்கை முஸ்லீம்களுக்கு புதிய அரசியல் யாப்பு நன்மை பயக்குமா?

email - vanni_inn@yahoo.com
Chinese, Indian, Sri Lankan Food available

Hotel Vanni Inn
A/C Room, Non A/C Room, Com Room, Quality Foods, Hall, Vehicle Parking
வவுனியா மண்ணில் நவீன வசதிகளுடன் கூடிய மங்கலகரமான அனைத்து நிகழ்வுகளுக்கும், மண்டபத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
2nd Cross Street, Vavuniya. Tel:- 0242222074, Fax:- 0242222074

ஜனநாயகத்தை அடியொற்றி மேற்கொள்ளப்பட்டுவரும் ஆட்சி முறைகளில் ஒன்று சமஸ்டியாகும். அதிகாரம் ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அங்கத்துவ அரசுகளுக்கும் இடையே பிரிக்கப்பட்டுப் பிரயோகிக்கப்படுவது சமஸ்டியாகும். இது கனடா, பிரேசில், பெல்ஜியம், ஸ்பெயின், சுவிஸ்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடைமுறையில் இருந்து வருகின்றது.

அந்த வகையில் இலங்கைத்தீவு பல்லின மக்களைக்கொண்ட ஒரு நாடாக காணப்படுகின்றது. அதில் கடந்த காலத்தில் தமது உரிமைகளுக்காக போராடி மிகவும் பாதிப்படைந்த ரீதியில் காணப்படுவது தமிழ் மக்களேயாவர். இலங்கையில் 1956ம் ஆண்டுக்குப் பின் உச்சம் பெற்ற அரசியல் மோதல்கள் வலுப்பெற்று 1983ம் ஆண்டுக்கு பின் எழுச்சி பெற்று ஆயுத போராட்டமாக வளர்ச்சி பெற்றது. இதற்கான காரணத்தை ஒரே வரிகளில் கூறுவதானால் அதிகாரம் பகிர்வே சாத்தியமாகக் காணப்படுகிறது.

70 வருடத்திற்கு முன்னர் பழமை வாய்ந்த ஓர் தீர்வாக அப்போது தமிழர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால் இன்று குடியியல் பரம்பல் ஏதுநிலைகள் மாற்றம் கண்டுவிட்டது. பூர்வீக தமிழர் நிலங்கள் பல்லின சமூகத்தின் வாழ்வியலை இன்று பிரதிபலிக்கிறது. திட்டமிட்டு தமிழர்கள் கலைக்கப்பட்டு நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும் மற்ற சமூகங்களின் இருப்பைத் தகர்க்க முடியாது.

இன்றுவரை திரும்ப திரும்ப நாட்டின் ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது ஒற்றையாட்சியை அல்லது அதிகார பகிர்வு பற்றியே. அதை தவறென்றும் எடுத்தியம்ப முடியாது. ஏனெனில் அப்போதைய சிங்கள ஆட்சியாளர்கள் விட்ட தவறே தமிழ் மக்கள் ஒற்றையாட்சி பற்றிய தவறான நிலைப்பாட்டிற்கு வருவதற்கு காரணமாக அமைந்தது. இலங்கை என்பது எங்கள் நாடு



முறை இடம் கொடுக்குமா? என்பது பற்றியே அழமான ஆய்வுகள் தேவை.

புதிய அரசியல் தீர்வைப் பெறுவது தொடர்பாக திறந்த உரையாடல்கள் தமிழ் தலைமைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆட்சி பீடத்தில் உள்ள விடயம் என்னவெனில் தற்போதைய அரசியல் யாப்பின் 13வது திருத்த சட்டத்தால் வழங்கப்பட்ட காணி மற்றும் பொலீஸ் அதிகாரத்தையேனும் இதுவரை வழங்க மறுத்த ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு இனிப்பான சமஸ்டியை வழங்குவார்களா?

# இலங்கையில் சமஸ்டி இல்லையேல் தமிழினம் ஆயுதம் ஏந்திப்போராடுவதை விட வேறு வழியில்லை



என்பது பெரும்பான்மை சமூகத்தின் கைகளிலேயே அல்லது அவை தமிழர்களுக்கு வழங்கப்படாமல் இருந்ததேயாகும். இலங்கையில் ஆட்சிபீடம் ஏறும் சிங்கள ஆட்சியாளர்கள் மனநிலை காலம் காலமாக தமிழர்களை அடிமைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது.

இதன் அடிப்படையில் தான் தமிழ் மக்களுக்கும் சிங்கள அதிகார வர்க்கத்துக்கும் இடையில் குரோத மனப்பான்மை வளர்ந்தது. இது அறுபது வருடம் கொண்ட தீராத பகையாக வளர்ந்த உணர்வாகும். இதனை இன்று மறுதலிக்க முடியாது. இதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தமது தீர்வை பெறவேண்டும்என சிந்திக்கிறார்கள். மீண்டும் மீண்டும் ஏமாற்றப்பட்டு விடுவோம் என அச்சம் கொள்கிறார்கள். இதனால் மற்றவர் பார்வையில் இனவாதிகளாக மாற்றப்படுகிறார்கள். தமது இனத்திற்காக குறைந்தபட்ச தீர்வாக தருவதை வாங்குவதற்கு பதிலாக இந்த நாட்டின் பூர்வீகத்தின் பங்காளிகள் என்பதால் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள துடிக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி பற்றி தமிழ் மக்கள் இன்று பேசுகிறார்கள். மிகவும் சிக்கலான இன அமைப்பை பெற்றுவிட்ட இன்றைய வடகிழக்கு அல்லது நாட்டுக்குள் சமஸ்டி எப்படி சாத்தியம் என்பது பற்றியோ, சிங்கள அதிகார வர்க்கம் தமிழர்களை அடிமைப்படுத்தியது போல தமிழர்கள் யாரையும் அடிமைப்படுத்தக்கூடாது என்ற எண்ணமோ தற்போது வரை தமிழ் மக்களுக்கு எழவில்லை. அதுவே 1947ல் கோரப்பட்ட அதாவது 70 வருடங்களுக்கு முன் தமிழருக்கு தந்தை செல்வநாயகம் முன்மொழிந்த சமஸ்டி தீர்வாகும். இதனைவிட முக்கியமானது அதனை இப்போது தான் தமிழ் தலைமைகள் ஆய்வு செய்கின்றமையாகும். இன்றைய சிக்கலான முறைக்குள் சமஸ்டி தீர்வை வழங்க நாட்டின் நிலைமை இடமளிக்கப் போவதில்லை. தமிழ் தலைவர்கள் அந்த தீர்வைப்பெறும் காலத்தை கடந்து வந்துவிட்டார்கள். இன்று பேரம் பேசும் சக்தி எதுவும் தமிழர்களுக்கு இல்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தீர்மானிக்கும் அதிகார என்றசிந்தனை அற்றுப்போவதற்குகாரணம். ஆனால் ஆரம்ப தலைவர்களாக இருந்த இராமநாதன், அருணாசலம் போன்ற தமிழ் தலைவர்கள் இலங்கை என்ற தேசபக்தியை தமிழர்களுக்கு விதைத்தனர். ஆனால் அதற்கான முட்டுகட்டைகள் தீவிர போக்கு கொண்ட சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தை முன்னிறுத்திய பண்டாரநாயக்கா போன்ற தலைவர்கள் தமது அரசியல் வாழ்வை தக்கவைக்க, பெரும்பான்மை சமூகத்தை திருப்திப்படுத்த, தேவையற்ற முறையில் வாக்குறுதிகளை வழங்கி, இரு சமூகங்களிடையே மோதலை தோற்றுவித்து தமிழர்களின் நல்லெண்ணங்களை கலைத்தனர், திட்டமிட்டு தமிழர்களுக்கான அதிகாரங்களை பறித்தனர். அத்தகைய அன்றைய ஆட்சி முதல் இன்றுவரை இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கான சம அந்தஸ்து இதுவரை கிடைக்கவில்லை. அதற்காக முட்டுக்கட்டைகளை போடுவதற்கு மட்டுமே சிங்கள ஆட்சியாளர்கள் முனைப்பு காட்டுகின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்த வடக்கு கிழக்கில் சமஸ்டி ஆட்சியைக் கோருகிறது. இக்கோரிக்கையை பற்றி ஆய்வு செய்யாமல் தற்போதைய ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய பதவியை வகிப்பவர்கள்அனைவரும்வெளிப்படையாக நிராகரித்துவிட்டனர். " அவர்கள் சமஸ்டி வழங்க முடியாது என்ற சமிக்ஞையை தெளிவாக சொல்லிவிட்டார்கள். எனவே தான் மீண்டும் தமிழர்களுக்குள் அதிகார போட்டி ஏற்படப்போகிறது. அது சமஸ்டி என்ற சொல்லின் மூலம் மீண்டும் ஏற்படுத்தப்படப்போகின்றது. அதை எவ்வளவு காலம் சென்றாலும் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்ளவும் போவதில்லை. அதை ஏற்றுக் கொள்வதற்கான மூலோபாயங்கள் இந்த நாட்டுக்குள்ளும் காணப்படவில்லை. விழலுக்கு இறைத்த நீராய் மட்டுமே தந்தை செல்வாவின்சமஸ்டி என்றபதம்தமிழர்களின் கையில் இனிவரும் காலங்களில் எல்லாம் இருக்கப்போகிறது. ஆட்சியின் அதிகாரத்தில் உள்ளவர்களின் நிராகரிப்பை இனவாதம் கொண்டு தமிழர்கள் இனி வரும் காலங்களில் நோக்குவது தவறானது. சமஸ்டி தீர்வை வழங்க இலங்கையின் பல்லின அமைப்புமுறை, இனப்பரம்பல் வர்களுடன் எதிர்க்கட்சியாய் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஸ்டி தீர்வு யோசனைகளைப் பற்றி திறந்த மனதுடன் பேசவேண்டும். வெறுமனே தமிழ் மக்கள் மத்தியில் பேசிவிட்டு இதுதான் தீர்வு என இடித்துரைப்பது உசிதமானதன்று. கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள் எல்லாம் சிங்கள பெரும்பான்மை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நகர்த்திச் செல்லவேண்டும். தெற்கில், சமஸ்டி கேட்பவர்களை இனவாத தமிழர்களாய் நோக்கும் தென்னிலங்கை சமூகத்துக்கும், சமஸ்டி இலங்கைக்கு பொருத்தமில்லை என்ற சமூக விஞ்ஞான கோட்பாட்டுக்கும் பதிலளிக்கும் மனநிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை. உண்மையாகவே இலங்கையில் சமஸ்டி தீர்வை வகுப்பதற்கான ஏது நிலைகள் இல்லை. ஆனால் கடந்தகால காழ்ப்புணர்வுகள், ஏமாற்றங்கள், அழிவுகளை கருத்தில் கொண்டு தனித்து வாழ சமஸ்டி கேட்பது இன்னும் பல இனக்குழுமங்கள் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் தூண்டும். அதன் பின் வடக்கு கிழக்கில் அல்லது கிழக்கில் தனி இன்னுமொரு சுயாட்சி பிரதேசத்தை அது ஊக்குவிக்கும். அது மீண்டும் ஒரு பிரிவினைக்கு வழிகாட்டும். எனவே தான் ஆட்சியாளர்கள் அச்சம் எதிர்காலத்தை நோக்கி நகர்கிறது.

இலங்கைக்குள் பார்வையை செலுத்தும் போது தமிழர் செறிந்துவாழும் பகுதி, சிங்களவர் செறிந்து வாழும் பகுதி, இந்திய வம்சாவழி மக்கள் செறிந்து வாழும் பகுதி, தமிழர்" பகுதிக்குள் செறிந்து வாழும் முஸ்லிம்கள், பெரும்பான்மை சிங்கள மக்கள் வாழ்கின்ற பகுதிக்குள் செறிந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் என ஒரு சிக்கலான் வாழ்வியலே காணப்படுகிறது. இங்கு தமிழர்கள் சிங்களவர்கள் என தீர்வை வழங்க முடியாத நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும்.

சமஸ்டி ஆட்சி முறையானது பிரிவினைவாதத்தை நோக்கி செல்லும் அல்லது ஊக்குவிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. இதன் அடிப்படையில் தமிழருக்கு என்றோ வடக்கு கிழக்குக்கு என்றோ சமஸ்டி தீர்வை முன்வைக்க ஆட்சியாளர்கள் விரும்பமாட்டார்கள். குறிப்பாக சொன்னால் நாம் இலங்கையர் என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனுக்கும் ஏற்படுவதை சமஸ்டி தடுத்துவிடும். உதாரணமாக நாட்டை நாம் பிரதிநிதித்துவம் செய்யாமல் மாகாணங்களை முதன்மையாகக்கொண்டு தமிழர், சிங்களவர், முஸ்லீம் என்ற எண்ணத்தை விதைத்துவிடும் என்ற ஆழமான பார்வை சிங்கள ஆட்சியாளர்களிடம் உண்டு. இதனடிப்படையில் சமஸ்டி என்பது இலங்கைக்கு எட்டாத தீர்வாக சொல்கிறார்கள்.

தமிழருக்கான சுயநிர்ணய உரிமையை வழங்குதல், பிரதேச சுயாட்சி வழங்குதல் என்பன பெரும்பான்மை சிங்கள மக்களை பொறுத்தவரை கசப்பான விடயமாகும். இங்கு ஒரு நகைப்புக்கான என்பதை மறந்து, சமஸ்டியை முன்கொண்டு செல்வது பொறுத்தப்பாடுகள் அற்றதே. தற்போது சமஸ்டியை நடைமுறைப்படுத்தும் நாடுகளை ஆய்வு செய்தால் அங்கு தீவிர வாதம் மிக்க அல்லது இனவாதம் மிக்க பிரச்சினைகள் எதிர்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை எல்லாம் ஒரே வகையானது என்று கூற முடியாது. எங்கெல்லாம் பிராந்திய மேலாதிக்கம் வலுப்பெறுகிறதோ அங்கெல்லாம் மத்திய அரசுடன் மோதல் தீவிரம் பெறுகிறது. இன்றைய யதார்த்தத்தில் கிழக்கு மாகாண ஆட்சிக்கும், வடக்கு மாகாண ஆட்சிக்கும் இடையே ஒப்பீட்டை மேற்கொள்ளலாம். கடந்த காலங்களில் மத்திய அரசுடன் தீவிரமாக போரிட்ட வடக்கு ஜனநாயகமும், மத்திய அரசுடன் இணங்கி ஒரு அலகாக செயற்பட்ட கிழக்கு மாகாண ஆட்சியையும் நினைவில் கொள்ள முடியும். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை மூன்று சமூகங்களின் பரம்பல் சமஸ்டிக்கு வளைந்து கொடுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் அற்ற நிலையிலேயே "உள்ளது. இங்கு சமஸ்டியை வழங்கினால் கிழக்கு மாகாணம் எதிர்காலத்தில் மூன்று சமூகங்களின் உச்சமான தீவிர மோதலை எதிர்கொள்ளவேண்டிவரும்.

இன்று உலகில் அனைத்து நாடுகளும் காலனித்துவ அல்லது குடியேற்றவாத நாடுகளாகவே இருந்துள்ளன. பல நாடுகளில் மக்கள் தாமாக புலம்பெயர்ந்து குடியேறியவர்களே அல்லது நாடுகள் தமது மக்களை காலனித்துவ ஆட்சியில் குடியேற்றின. அதேபோல அடிமைகளாகவும் கொண்டு செல்லப்பட்டனர். இந்த மக்களே பல சமூகங்களாக இன்று உலகில் இருக்கின்றனர். இன்று பல்வேறு நெருக்கடிகள் இனங்களிடையே நாடுகளுக்குள் நடைபெறுகின்றன. அது ஆசியா என்றோ ஐரோப்பா, ஆபிரிக்கா என்றோ ஒற்றைச்சொல்லில் அடக்கி விடமுடியாது. எனவே அந்த நெருக்கடிகளுக்கு எல்லாம் பொதுவாக தீர்வை வழங்க வேண்டும். ஆனால் அந்த தீர்வு நீருபூத்த நெருப்பாய் வளர்வதற்கு இடமளிக்கக்கூடாது. அவை மீண்டும் இனங்களுக்குள் பிரிவினையை விதைக்க ஆயுதமாக இருக்கக் கூடாது. சமஸ்டி என்பதை பெற்றால் அடங்கி போகும் சமூகத்துக்கு இசைவான நிலையை கடைப்பிடிக்கவேண்டிவரும். அதன் மூலம் சமஸ்டி நிலைக்கக்கூடிய நிலையான உறுதியை பெற்றுவிடும். அதைவிடுத்து கடும் தீவிரவாத போக்குகொண்ட சமூகங்களுக்கு இத்தீர்வு எட்டாத பொருத்தமே.

பல்லின சமுக ஒழுங்கமைப்பை கொண்டுள்ள இலங்கையில் மலையக தமிழ் மக்கள் தமக்கு சமஸ்டி முறையான அரசியலமைப்பை கோருவதற்கு முடியாத நிலையிலேயே உள்ளனர். காரணம் அவர்கள் பெரும்பான்மை சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம் என ஒரு சேர மலையகத்தில் வாழ்கின்றனர்.

12ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## புதிய அரசியலமைப்பும் குளறுபடிகளும்

இன்றைய அரசியல் வட்டாரத்தில் புதிய அரசியல் யாப்பு மாற்றம் குறித்ததான பேச்சுக்கள் அதிகளவில் இடம்பெறுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டரசின் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருதல் என்ற விடயம் தற்போது சூடுபிடித்துள்ளதுடன், தற்போது சமஸ்டியா அல்லது ஒற்றையாட்சியா என தேசிய ரீதியில் பல்வேறான வாதப் பிரதிவாதங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், த.தே.கூட்டமைப்பு இணைந்த வடக்கு கிழக்கில்சமஸ்டி குறித்துதமது கோரிக்கையை அரசிற்கு முன்வைத்துள்ளனர். நல்லாட்சியைக் கொண்டுவந்த தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஆட்சிக்கு வந்த அரசுஇழுத்தடிப்புச்செய்கின்றது. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அனைத்து செயற்பாடுகளும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

பிரச்சினைக்குத்தீர்வுகாணும்யோசனையை இலங்கை அரசானது கைவிட்டால் அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் வேறு செயற்பாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்களிப்பினை வழங்காமல் அதிலிருந்து வெளியேறும் நிலை ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் எச்சரித்துள்ளார்.

உத்தேச அரசியல் யாப்பில் 13வது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டவாறு அதிகாரங்கள் பகிரப்படுகின்ற அதேவேளை, அதில் காணப்படுகின்ற பொதுப்பட்டியல் நீக்கப்படுவதுடன் வடக்கு கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களின் நம்பிக்கையை பெறும் வரை சாத்தியமாகாது எனவும் புதிய அரசியலமைப்பானது குறித்த வார்த்தைப் பிரயோகங்களை நீக்கிவிட்டு, பகிரப்படுகின்ற அதிகாரங்களை மீளப் பறித்தெடுக்க முடியாத வகையில் சட்ட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும், நாட்டில் உள்ள எந்தவொரு சமூகத்தையும் பாதிக்காத முழுமையான அதிகாரப் பகிர்வாக அமையும் வகையிலேயே உருவாக்கப்படுகின்றதென நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உத்தேச அரசியலமைப்பின் ஊடாக உள்ளூராட்சி சபைகளுக்கோ, மாகாண சபைகளுக்கோ காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அதிகரிப்பதை கடுமையாக எதிர்க்கின்றோம் என மல்வத்து பீட துணை நாயக்கர் வண.திம்புல்கும்புற விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டங்களை உரியமுறையில் வழங்க அரசாங்கம் முன்னைய காலத்திலிருந்து இற்றைவரை இழுத்தடிப்புச் செய்தே வந்துள்ளது. 13,+13,18,19,+19,20இற்கு மேல் தமிழ் மக்களுக்கான தீர்வுகள் என மஹிந்தவின் அரசு கூறிவந்த நிலையில் தமது சுயநல அரசியலுக்காக தமிழினத்தை பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வந்ததே வரலாறு. தமிழ் மக்களுக்கான தீர்வுகள் ஆக்கபூர்வமாக அமையப்பெறாததன் விளைவே ஆயுதப்போராட்டமாக வெடித்தது. அதனையே மீண்டும் தமிழினத்திடமிருந்து அரசு எதிர்பார்க்கிறதா? என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. த.தே.கூ.வின் தலைமைகள் இதற்குரிய தீர்க்கமான முடிவினை மேற்கொள்ளாதுபோனால் தமிழினம் மீண்டும் ஒரு போராட்டத்தை சந்திக்க நேரிடும்.

குறிப்பாக வடகிழக்கில் போதைப்பொருள் கலாச்சாரத்தை இவ்வரசு நிறுவிவருகிறது. அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அரசு செயற்படவில்லை. இதன் ஊடாக தமது அரசியலை வடகிழக்கில் நடத்திவருகிறது. தமிழர்களின் நினைவுச் சின்னங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. அரசியலமைப்பினால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்காது போகுமாகவிருந்தால் த.தே.கூட்டமைப்பு எதிர்க்கட்சிப் பதவியில் இருந்து விலகி மீண்டும் த.தே.கூட்டமைப்பாக தமிழ் மக்களுக்குக் குரல்கொடுக்கவேண்டும். இது தவறினால் தமிழ் மக்களது தேசியம், சுயநிர்ணய உரிமை, கலை, கலாச்சாரங்கள் என்பன குழிதோண்டிப் புதைக்கப்படும்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



**107** எமது காப்பரண்களின் பின்புறம் படையினர் மிகப்பலமான நிலைகளை அமைத்து, எமது வெளியேற்றத்தைத் தடுப்பதற்குத் தமது முழுப்பலத்தையும் பயன்படுத்தினார்கள்.

அடிவாங்கி ஓடிவந்த நாம் ஒரேயடியாகப் பின்னோக்கிப் பாயவில்லை. சிறிது தூரத்தில் நின்று நிதானித்துக்கொண்டோம். விதுஷாவோடு தொடர்புகொண்டு, அவரின் ஆலோசனையோடு திட்டமிட்டோம். விதுஷா ஒழுங்குபடுத்தியபடியே எறிகணைகளும், புகைக்குண்டுகளும் நாங்கள் நின்ற பகுதிக்கு அடித்துக் கொடுக்கப்பட்டன.

புகை மண்டலத்தைப் பயன்படுத்தி வேகமாக நகர்ந்த எங்களை, புகை சற்றுக் கலையத் தொடங்கியதும் படையினரின் எறிகணைகளும், ரவைகளும் தேடிவந்தன. படையினரின் அடி கடுமையாக இருந்தது. அடிவந்த திசைகளைநோக்கி சுகந்தியின் கட்டளைப்படி ஒளியரசியின் PK LMG சீறியது. படையினர் அடித்த அடியில் இவர்களோடு நின்ற ஆண் போராளி இளம்புலவன் காயமடைந்துவிட்டார். முன்னும் பின்னும் பக்கவாட்டுகளிலும் ரவைகளும், எறிகணைகளும் கூவிவிழுந்து புழுதி கிளப்ப, அதற்கும் நடுவே எமது மருத்துவப் போராளிகள் தளிரும் குறிஞ்சியும் இளம்புலவனுக்குக் கட்டுக்களைப் போட்டு குருதியிழப்பைக் கட்டுப் படுத்தினார். இளம்புலவனையும் தூக்கிக்கொண்டனர்.

உள்ளே ஒன்றுசேர்ந்திருந்த அனைவரையும் இணைத்து முக்கோண நிலையை அமைக்குமாறு பணித்த விதுஷா, மூவரை முன்னே நகர்த்தி நிலைமையை அவதானிக்கும் படி சொன்னார். தப்பி வெளிவரும் அடுத்த முயற்சியாக எல்லோரும் முக்கோண வடிவில் நிலைகொண்டோம். ஒளியரசியின் PK LMG காப்புச்சூட்டுக்கான தயார் நிலையில் அமுதாவுடன் ஒரு சிறு அணி இராணுவம் தற்போது நிலையெடுத்துள்ள திசையைநோக்கி நகர்ந்தது.

அவர்கள் திரும்பி வந்ததும் எறிகணை செலுத்தியின் ஆதரவுச் சூடுகளைப் பெற்றுக்கொண்டும் குண்டுகளை அடித்தவாறும் நகரத் தொடங்கினோம். புகைக்குண்டின் புகை கலையும்வரை காத்திருந்த படையினர் இம்முறையும் எங்களை விளாசத்தவறவில்லை. நாங்களும் விடவில்லை. அடித்தவாறே உடனே பின்னகர்ந்தோம். ஆனால் படையினர் இப்போதுதாம்புதிதாக அமைத்தநிலைகளிலே நிற்பதைவிடுத்து, உட்புறமாக நகர்ந்து எங்களை நெருங்கத் தொடங்கினார்கள். சண்டை மாறி மாறி நடந்தது. நாங்கள் நகருவதும், அவர்கள் நகருவதுமாக கடுமையான சண்டை நடந்தது.

காலையில் சண்டை தொடங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் காயப்பட்ட இன்சுரபியைக் காவிக்கொண்டுஅந்த இடம்முழுவதும் அலைந்து திரிந்தோம். எப்படியாவது அவரை வெளியே கொண்டுபோய்க் காப்பாற்றிவிடவேண்டும் என்ற தவிப்பு எல்லோரிடமும் இருந்தது. ஆனால் இரண்டாவது புகைக்குண்டு நகர்வின்போதுவிழுந்ததோநல்ல அடி. அந்த அடியில் மறுபடியும்காயமடைந்த இன்சுரபி தன்னைச் சுமந்திருந்த போராளியின் கைகளிலேயே கண்களை மூடினார். சுமந்தவருக்கும் காயங்கள்தான். எல்லோருடைய மனங்களும் கனத்துப்போயின. இதுவரையும் எம்மோடு காவித்திரிந்த இன்சுரபியை முக்கோணநிலை எடுக்கும்போதுங்கூட எங்களுக்கு நடுவில் வைத்திருந்தோம். இப்போது உயிரில்லை. கேணல் விதுஷா அவர்களின் கட்டளை கிடைத்தது.

"இன்சுரபியை அடையாளப்படுத்தக் கூடியமாதிரி ஓரிடத்தில் வைத்துவிட்டு நீங்கள் அடுத்த நடவடிக்கையில் ஈடுபடுங்கள்"

அந்தக் கட்டளைக்குப் பின்னரே இன்சுரபியை அருகிலிருந்த பனைமரத்தின் அடியில் படுக்கவைத்து ஓலைகளால் மூடிவிட்டோம். அந்த இடத்தில் அதற்கு மேல் எதுவுமே செய்ய எங்களால் முடியவில்லை. விட்டுவிட்டுவர மனமின்றி அந்த இடத்தின் ஆள்கூறைக் கணித்துக் கொண்டு நகர்ந்தோம்.

மீளவும் முக்கோண நிலையமைத்தோம். நாங்கள் நின்ற இடத்தின் ஆள்கூறைத் தரும்படி விதுஷா கேட்டார். சிவந்தினி ஆள்கூறைக் கணிப்பிட்டு தெரியப்படுத்தினார். படையினர் மீளவும் தமது தேடல் நடவடிக்கையில் முன்னேறி வந்தனர். இம்முறை மோதிக்கொண்டதில் வேங்கையும் லெப்.சுதாகரியும் எங்களிடமிருந்து சிதறிப் பிரிந்துவிட்டனர்.

படையினர் நகர்ந்துவந்த இடங்களுக்கு எறிகணைகளைக் கேட்டு விழுத்தினோம். இதனால் படையினர் தேடலைக் கைவிட்டு, நாங்கள் தப்பிச்செல்ல வாய்ப்புகளுள்ள பாதைகளில் நின்றுகொண்டார்கள். முகமாலை-கடற்கரை வீதியில் படையினர் பரவலாக நடமாடிக்கொண்டிருந்தனர். பாதையிலிருந்து 50மீ உட்புறமாக நாங்கள் நின்றோம். அவர்கள் எங்களை இன்னமும் காணவில்லை. ஆனால் வேறொரு முனையிலிருந்து சோதியாவினுள் ஏராளம் படையினர் நகர்ந்துகொண்டிருந்தார்கள். தொடர்ந்து உழவு இயந்திரத்திலும் சென்றுகொண்டிருந்தனர். நடந்து போய்க்கொண்டிருந்த ஒவ்வொரு படையினருக்குமிடையே 10மீ இடைவெளி இருந்தது. முற்றுகை வளையத்தினுள் இவ்வாறு படையினர் தமது செறிவை அதிகரிப்பது எங்களது நிலையை மேலும் மேலும் ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டிருந்தது.

மதியம் கடந்து மாலையாகிக் கொண்டிருந்தது. கேணல் விதுஷாவின் கட்டளை கிடைத்தது. "மூன்று பேரை முன்னுக்கு நகர்த்த வேவு பார்த்து, ரீமை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியிலை வாங்கோ"

நகர்ந்தோம். ஆனால், திசை சரிதானா என்ற ஐயம் எழுந்தது. மீளவும் ஆள்கூறை அறிவித்தோம். இப்போது 130 பாகையில் வரும்படி சொல்லப்பட்டது. அதன்படி நகரந்துபோனோம். நாங்கள் போன திசையில் ஒரு மாமரத்தடியில் இராணுவம் இருந்து கதைத்துக்கொண்டிருந்தது. நாங்கள் ஓசையெழுப்பாமலே பக்கவாட்டாக மேலி குறிப்பிட்ட இடத்தைநோக்கிச் சென்றோம்.

இப்போது இரவு 7.00 மணியாகிவிட்டது. மறுபடியும் நகரத் தொடங்கினோம். பொறுமையை இழந்த சிலர் தாம் இராணுவத்தினரைத் தாக்கப்போவதாக சுகந்தியிடம் கேட்டனர். இன்னும் கொஞ்சநேரம் பொறுத்திருங்கள் என்று அவர்களை நிதானப்படுத்தினார் சுகந்தி. மற்றைய முற்றுகைக்குள் சிக்கியிருந்த ஜமுனா, வீரமணி ஆகியோர் தமது முற்றுகைக்கு வெளியே வந்துவிட்டிருந்தனர். எப்படியாவது எங்களையும் வெளியே வரும்படி விதுஷா மறுபடி மறுபடி கேட்டுக்கொண்டிருந்தார்.

சோதியா தளத்தின் மையப் பகுதிக்குள், ஜமுனாவின் களநிலை கட்டளை நிலையம் அமைந்திருந்தது. சண்டை தொடங்கிய அதே நிமிடங்களில், பரவலாக வேகமாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. உலங்குவானூர்தி சுட்டுத்தள்ளிக்கொண்டும் குண்டுகளை வீசிக்கொண்டும் இருந்தது.

தொலைத்தொடர்புக் கருவியூடே கதைத்துக்கொண்டிருந்த ஜமுனாவுக்கு நிலைமை விளங்கியது. தாம் சுற்றி வளைக்கப்படுவதை உணர்ந்தார். உடைக்கப்பட்ட பகுதிக்குள்ளிருந்து அடிகள் செறிவாக வந்துகொண்டிருந்தன. முன்னரங்க நிலைக்குச் சற்றுப் பின்னால் நின்ற சுபத்திராவின் 50 கலிபர் தனது சூட்டுவலுவைக் காட்டிக்கொண்டிருந்தது.

தொடர்வார்...

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 693. | கப்டன்.ஞானமதி | கௌசிகா சரவணானந்தம் | யாழ்ப்பாணம் | 1999.12.13 | வெற்றிலைக்கேணி எறிகணைவீச்சு |
| 694. | கப்டன்.மாங்குயில்/மங்களாம்பிகை | சிறீதா தெய்வேந்திரம் | யாழ்ப்பாணம் | 1999.12.15 | பூம்புகார் ஓயாத அலைகள் - 3 |
| 695 | வீ.வே.பூமளா | சந்திரகலா வடிவேல் | வவுனியா | 1999.12.17 | பரந்தன் ஓயாத அலைகள் - 3 |
| 696. | வீ.வே.கலைத்தமிழி | சியாமளா திருநாவுக்கரசு | மன்னார் | 1999.12.17 | பரந்தன் ஓயாத அலைகள் - 3 |
| 697. | வீ.வே.நகுலா/யாழிசை | மனோகரி தர்மரத்தினம் | யாழ்ப்பாணம் | 1999.12.17 | பரந்தன் ஓயாத அலைகள் - 3 |
| 698. | வீ.வே.எழில்நிலா | அஞ்சலா கோபாலப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 1999.12.17 | பரந்தன் ஓயாத அலைகள் - 3 |
| 699. | வீ.வே.குயிலிசை | மேரிநிசாநந்தினி மரியதாஸ் | முல்லைத்தீவு | 1999.12.17 | பரந்தன் ஓயாத அலைகள் - 3 |

# விடுதலைப்புலிகளின் மீது 30 நாடுகள் இணைந்து போர் தொடுத்தமைக்கான காரணம் என்ன?

விடுதலைப்போராட்டம் ஏன் தொடங்கியது, விடுதலைப்புலிகள் எவ்வாறு உருவாகினார்கள், அவர்கள் எங்கிருந்து உருவாகினார்கள், அவர்களின் போராட்ட வரலாறு என்ன?, அவர்கள் எதற்காகப் போராடினார்கள்? என்று தெரிந்தும் சில அடிவருடிகள் சந்தர்ப்பத்திற்கேற்ப பச்சோந்திகளாக மாறி, "விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு தீவிரவாத இயக்கம்" என சிங்களவர்களுடன் சேர்ந்து அறிக்கைகள் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சில போராளிகள், சில தளபதிகள் சிங்கள அரசப் படைகளை எதிர்த்துகண்ணுக்குஎட்டும்தூரம் வரை நின்று போராடியிருக்கிறார்கள். சிங்களப்படைகள் நெருங்க நெருங்க துப்பாக்கி ரவைகள் முடியும் வரை நின்று போராடியிருக்கிறார்கள். அவர்கள் தான் கைது செய்யப்பட்டு அந்தந்த இடங்களில் வைத்தே உடனடியாக பழி தீர்க்கப்பட்டவர்கள் ஆவார்கள். உலகில் எந்த யுத்த களத்திலும் அதியுச்ச போர் நடந்துகொண்டிருக்கும் ஒரு குறுகலான சிறிய இடத்தில் வைத்து அந்தப் போராட்ட வேளையிலே யுத்த கோரத்தாண்டவங்களை நேரடியாக எவரும் ஒலிப்பரப்பு செய்துகொண்டிருக்க மாட்டார்கள்.

ஆனால், விடுதலைப்புலிகளோ கடும் யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், ஒரு சிறிய சரக்கு வாகனத்தில் வைத்து "தவ பாலன்" என்ற போராளி தான் சுடப்பட்டு இறக்கும் வரை "புலிகளின் குரலை" இறுதி வரை ஒலிக்கச்செய்து கொண்டிருந்தார். அவ்வாறு சில போராளிகள் படங்கள், வீடியோக்களை பதிவுசெய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியதாலும், மக்களின் பேரவலங்கள் இன்று உலகின் பார்வைக்கு வந்தது. விடுதலைப்புலிகளை "தீவிரவாதிகள்" என்று விமர்சித்து கொச்சைப்படுத்துபவர்களே! உங்கள் சுயமூளையுடன் சற்று சிந்தியுங்கள். உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரையும் உலகில் எந்த விடுதலை அமைப்புக்களும் விடுதலைப்புலிகள் போல் வளர்ந்ததும் இல்லை, வாழ்ந்ததும் இல்லை. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டுவரை உலகில் எந்த விடுதலை அமைப்பு, விடுதலைப் புலிகள் போல் போராடினார்கள்?

உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பும் தனக்கென தனியாக இராணுவச் சீருடைகளை அணிந்ததில்லை. உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பினரும் தங்களது படை நடவடிக்கைகளுக்கு பெயர் சூட்டி அழைத்ததில்லை. உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பினரும் போரில் இறந்த தங்கள் வீரர்களுக்கு தனியாக இடம் ஒதுக்கி கல்லறைகள் (துயிலும் இல்லங்கள்) கட்டியதில்லை. உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பும் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களை இழந்ததில்லை. உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பினரையும் உலக அரங்கில் பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேச நாடுகள் அழைத்ததில்லை. உலகில் எந்தவொரு விடுதலை அமைப்பினருக்கும் ஏராளமான சமூக, போராட்ட, செய்தி இணையத்தளங்கள் இருந்ததில்லை. முகநூல்களிலும், வேறு சமூக, செய்தி இணையத்தளங்களிலும் தலைவர் பிரபாகரன் பற்றியும், விடுதலைப்புலிகள் போராட்டம் பற்றியும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வந்ததுபோல், வேறு எந்த விடுதலை அமைப்பினர் பற்றியும் பரவலாக செய்திகள் வந்ததில்லை. விடுதலைப் புலிகளுக்கு உலகினில் வாழும் அனைத்து தமிழர்களிடமும் இருந்து கிடைக்கப்பெற்ற பெரும் செல்வாக்குபோல், உலகினில் வாழும் வேறு எந்த விடுதலை அமைப்புக்கும் கிடைத்ததில்லை.

விடுதலைப்புலிகள் தீவிரவாத இயக்கம் என்றால் எப்படி முப்படைகளையும் கொண்ட மரபுவழி இராணுவமாக வளர முடிந்தது? அது எப்படி சாத்தியமானது? அவர்கள் தீவிரவாதிகள் என்றால், எப்படி மக்களின் பெரும்பலம் அவர்களுக்குக் கிடைத்தது? பிறகு ஏன் விடுதலைப்புலிகளை முப்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் சேர்ந்து அழிக்க வந்தன? அந்த சிறிய தேசத்தில் இருந்து அவர்கள் வளர்ந்த அசுர வளர்ச்சிதான் அதற்குக் காரணம். அவர்களின் வளர்ச்சியை ஜீரணித்துக் கொள்ள முடியாத இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் அவர்களையும், அவர்களின் போராட்டத்தையும் அழித்துவிட முடிவு செய்து, போர்தொடுத்து மக்களை துடிக்கத் துடிக்க கொன்றுகுவித்து, போராளிகளை கொன்றும், சில போராளிகளைக் கைதுசெய்தும் சகல இடங்களையும் கைப்பற்றினார்கள். ஆனால், அவர்களுக்குக் கிடைத்ததோ விடுதலைப்புலிகளின் சில ஆயுதங்கள் மட்டுமே. அவ்வாறெனில் சில நூற்றுக்கணக்கான தளபதிகளும், பல ஆயிரக்கணக்கான போராளிகளும் எங்கே போனார்கள்? அவர்கள் தான் அங்கிருந்த தமிழ் பேசும் மக்கள் என்பதை இன்று வரையும் விடுதலைப்புலிகளை "தீவிரவாதிகள்" என்று சொல்லும் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. இன்று வரையும் சில சர்வதேச நாடுகளாலும், சில விசக்கிருமிகளாலும் "தீவிரவாதி" என்றழைக்கப்படும் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஒரு தனி மனிதனாக ஒரு விடுதலைப் படையை உருவாக்கி, மக்களுக்கான பல நன்மைகளும், பயன் பெறக்கூடியதுமான பல உட்கட்டமைப்புக்களை உருவாக்கினார்.




அந்த உட்கட்டமைப்புக்கள் பின்வருமாறு:-

தமிழீழ காவல்துறை, குற்றத் தடுப்புக் காவல் துறை, குற்றப் புலனாய்வுப் பிரிவு.
தமிழீழ வைப்பகம்.
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.
தமிழர் புனர்வாழ்வு அபிவிருத்திக் கழகம்.
சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி.
கிராமிய அபிவிருத்தி வங்கி.
அனைத்துலகச் செயலகம்.
நந்தவனம் (வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்புவோர்களுக்கான தொடர்பாடல் சேவை மையம்)
சுங்க வரித்துறை.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.
அரசறிவியற் கல்லூரி.
வன வளத்துறை.
தமிழீழ நிதித்துறை.
தமிழீழ நீதித்துறை, நீதிமன்றுகள்.
கலை பண்பாட்டுக்கழகம்.
மருத்துவப் பிரிவு.
திலீபன் சிறப்பு மருத்துவமனை.
பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை.
மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு.
சுகாதாரப் பிரிவு.
ஆவணப்படுத்தல், பதிப்புத்துறை.
வெளியிட்டுப் பிரிவு.
போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு.
நிர்வாக சேவை.
அனைத்துலக தொலைத்தொடர்பு செயலகம். மீன்பிடி வளத்துறை.
விழிப்புக்குழு (கிராமங்களுக்கான இரவுப் பாதுகாப்பு) தொழில் நுட்பக் கல்லூரி.
சூழல் நல்லாட்சி ஆணையம்.
தமிழீழ பொறியியல் தொழில்நுட்ப வளர்ச்சித்துறை. தமிழீழ விளையாட்டுத்துறை.
தமிழீழ காலநிலை அறிவுறுத்தல் வாரியம்.
தமிழீழ போக்குவரவுக் கழகம்.
மனிதவள செயலகம் (தமிழீழ கிராம சேவகர் பிரிவு). வளங்கள் பகுதி.
மக்கள் தொடர்பகம் (மக்கள் குறை நிறைகளை தலைவரிடம் கொண்டு செல்லும் பிரிவு) விலங்கியல் பண்ணைகள்.
விவசாயத் திணைக்களம், தமிழ்மொழி காப்பகம். தமிழீழ சட்டக்கல்லூரி. தமிழீழ கல்விக் கழகம். தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை. காந்தருபன் அறிவுச்சோலை (ஆதரவற்ற ஆண் குழந்தைகளுக்கானது).
செஞ்சோலை (ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கானது).
செந்தளிர் (ஐந்து வயதிற்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகளுக்கானது).
வெற்றிமனை (வலுவிழந்தோருக்கானது)
அன்பு முதியோர் பேணலகம்.
இனிய வாழ்வு இல்லம். (காது கேளாத, வாய் பேசாத, பார்வை இல்லாத ஊனமுற்ற சிறுவர் சிறுமிகளுக்கானது)
சந்தோசம் உளவள மையம் (மனநோயாளிகளுக்கானது).
நவம் அறிவுக்கூடம் (பார்வை இழந்த போராளிகளுக்கானது)
மயூரி இல்லம் (இடுப்பின் கீழ் வலுவிழந்த பெண் போராளிகளுக்கானது)
சீர்திருத்தப் பள்ளி.
முரளி முன்பள்ளி (ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்பப் பள்ளி).
புனிதபூமி மகளிர் காப்புத்திட்டம்
உதயதாரகை (விதவைகளுக்கானது).
பெண்கள் மறுவாழ்வு அபிவிருத்தி மையம்.
பசுமை வேளாண் சேவை (விவசாயிகளுக்கானது).
எழுகை தையல் பயிற்சி மையம்.
மாணவர் அமைப்பு.
பொத்தகசாலை (அறிவு அமுது).
ஒளிப்படபதிவுப்பிரிவு, திரைப்படவெளியிட்டுப் பிரிவு. நிதர்சனம் (திரைப்படத் தயாரிப்பு).
தர்மேந்திரா கலையகம் (திரைப்பட கலைகள் சம்மந்தமானது).
விடுதலைப்புலிகள் செய்தி இதழ்.
சுதந்திரப் பறவைகள் (பெண்கள் செய்தி இதழ்).
ஈழநாதம் (தினச்செய்தி பத்திரிகை).
வெளிச்சம் (மாத சஞ்சிகை).
நாற்று (மாத சஞ்சிகை).
பொற்காலம் வண்ணக் கலையகம்.
அருச்சுனா புகைப்படக் கலையகம்.
ஒளிநிலா திரையரங்கு. புலிகளின் குரல் வானொலி. தமிழீழ வானொலி.
தமிழீழ தேசியத் தொலைக்காட்சி.
பல சமூக செய்தி இணையத் தளங்கள்.
தமிழீழ இசைக்குழு.
காலணி (பாதணி உற்பத்தி மையம்)
சேரன் உற்பத்திப் பிரிவு.
சேரன் வாணிபம்.
சேரன் சுவையகம்.
சேரன் வெதுப்பகம்.
சேரன் அரைக்கும் ஆலை (அரிசி உற்பத்தி).
பாண்டியன் உற்பத்திப் பிரிவு. பாண்டியன் சுவையூற்று. பாண்டியன் பல்பொருள் வாணிபம். சோழன் தயாரிப்புகள்.
பொன்னம்மான் உரைவகை வாணிபம்.
தென்றல் இசைத்திருவியலகம். தமிழ்மதி நகை மாடம். தமிழ்நிலா நகை மாடம். தமிழரசி நகை மாடம். அந்திவானம் பதிப்பகம்.
இளந்தென்றல் குடிவகைப் பிரிவு.
இளவேனில் எரிபொருள் நிலையம்.
இளந்தென்றல் தங்ககம் மருதம் வாணிபம்.
மருதம் புலால் விற்பனை நிலையம் (மாமிசம்). மரமடுவம் (காட்டுமரங்கள், விறகுகள் விற்பனைப் பகுதி). கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலை. மாவீரர் அரங்குகள்.
மாவீரர் நினைவு விளையாட்டு அரங்குகள்.
மாவீரர் நினைவு வீதிகள்.
மாவீரர் நினைவு குடியிருப்புத்திட்டங்கள்.
மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம்.
மாவீரர் நினைவுப் பூங்காக்கள்.
மாவீரர் நினைவுப் படிப்பகங்கள்.
மாவீரர் நினைவு நூலகங்கள்.
மாவீரர் நினைவு விலங்கியல் காப்பகம்.
மாமனிதர் விருதுகள் (சமூக, பொதுத் தொண்டுகள் செய்வோருக்கானது)

இதுதவிர இரணைமடு அறிவியல் நகரில் புதிதாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழீழ பல்கலைக்கழகம் இறுதி யுத்தத்தினால் கைவிடப்பட்டுள்ளது. இன்னும் பெயர் தெரியாத நிறைய அமைப்புக்கள். உலகில் வாழும் எந்தவொரு விடுதலை அமைப்பும் விடுதலைப் புலிகளைப்போல் தங்கள் தேசத்திற்கென "தேசிய மலர்", "தேசிய மரம்", "தேசியப் பறவை", "தேசிய விலங்கு" போன்ற தேசியச் சின்னங்களை வைத்துக்கொண்டதில்லை. சிங்கள அரசாங்கமானது ஒவ்வொன்றுக்கும் தடைபோட்டுநசுக்கிப்பறிக்கப்பறிக்கதலைவர் பிரபாகரன் ஒவ்வொன்றையும் பாதுகாக்க பல அமைப்புக்களை உருவாக்கினார். அவைகள் தான் மேற்குறிப்பிட்ட மக்களுக்கான உட்கட்டுமான அமைப்புக்கள். இவர்தான் உங்கள் பார்வையில் தீவிரவாதியா?

மக்களுக்கான கட்டமைப்புக்கள் ஒருபுறமிருக்க, இராணுவக் கட்டமைப்புக்களைப் பாருங்கள்.

**தரைப்படைகள்**

இம்ரான் பாண்டியன் படையணி.
ஜெயந்தன் படையணி.
சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.
கிட்டு பிரங்கிப் படையணி.
குட்டிச்சிறி மோட்டார் படையணி.
இராதா வான்காப்பு படையணி.
சிறப்பு உந்துகணை செலுத்திப் படையணி.
விக்டர் கவச எதிர்ப்புப் படையணி.
சோதியா சிறப்புப் படையணி.
மாலதி சிறப்புப் படையணி.
அன்பரசி படையணி. ஈருடப் படையணி.
குறி பார்த்துச் சுடும் படையணி.
சிறுத்தைப் படையணி. எல்லைப்படை, துணைப்படை, பொன்னம்மான் கண்ணிவெடிப் பிரிவு, ஆயுதக்களஞ்சிய சேர்க்கைப் பிரிவு. பாதுகாவலர் பிரிவு. முறியடிப்புப் பிரிவு. கப்டன் முகிலன் நீண்ட தூர விசேட வேவு ரோந்து அணி.
ஆழ ஊடுருவும் படையணி. உந்துருளிப் படையணி.

**கடற்படைகள்**

கங்கை அமரன் நீரடி நீச்சல் பிரிவு.
கடல் வேவு அணி. சாள்ஸ் சிறப்பு அணி.
அங்கயற்கண்ணி ஆழ்கடல் நீச்சல் அணி (பெண்கள்). சுலோஜன் ஆழ்கடல் நீரடி நீச்சல் அணி (ஆண்கள்).
கடற்சிறுத்தை சிறப்பு அணி. சங்கர் படையணி. வசந்தன் படையணி. சேரன் படையணி. பாக்கியன் ஆழ்கடல் தாக்கும் படையணி. வான்படை. கரும்புலிகள். புலனாய்வுத்துறை. வெளியகப் புலனாய்வுப் பிரிவு. உள்ளகப் புலனாய்வுப் பிரிவு.
படையப் புலனாய்வுப் பிரிவு.
வேவுப் பிரிவு. களமுனை முறியடிப்புப் பிரிவு. களமுனை மருத்துவப் பிரிவு. கணினிப் பிரிவு. பொறியியல் பிரிவு. விசேட வரைபடப் பிரிவு. அரசியல் துறை, பரப்புரைப் பிரிவு. கொள்கை முன்னெடுப்புப் பிரிவு.
தமிழீழ படைத்துறைப் பள்ளி. ஆயுத உற்பத்திப் பிரிவு. மின்னணுவியல் சிறப்பு உதவிப் பிரிவு. மாவீரர் பணிமனை.

இப்படியானதொரு இராணுவக் கட்டமைப்பை உலகிலுள்ள எந்தவொரு விடுதலை இயக்கமும் கொண்டு செயற்படவில்லை. தொடரும்.

மறவன்

# பண்டாரவன்னியன் சிலை திறப்பும், தமிழ் அரசியல் கட்சிகளின் வங்குரோத்து அரசியலும்



கடந்த சில வாரங்களாக வன்னிப் பெருநிலப்பரப்பில் பண்டாரவன்னியன், காந்தி போன்றவர்களுக்கு சிலை திறப்பு என ஆரம்பிக்கப்பட்டு, இதில் மல்லாவியில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் அவர்களால் பண்டாரவன்னியன் சிலை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் காந்தி சிலை முல்லைத்தீவில் அமைக்கப்படவிருந்த சமயம் வடமாகாண சபையின் உறுப்பினர் ரவிகரனின் அடியாட்களால்அச்சிலைஉடைக்கப்பட்டதாக அப்பிரதேசத்தைச் சேர்ந்த செழியன் என்பவர் சுனாமி நினைவுதினத்தின்போது பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். இது இவ்வாறிருக்க, மல்லாவியில் பண்டாரவன்னியன் சிலை திறந்துவைக்கப்பட்டதன் பின்னர் இப்பண்டாரவன்னியனின் சிலையில் பல குறைகள் இருப்பதாகவும், இது ஒரு நோய்வாய்ப்பட்ட சிலை போலக் காணப்படுவதாகவும் அரசியல்வாதிகளால் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக10.01.2017அன்றுவடமாகாண சபையில் வடமாகாணசபை உறுப்பினர் மயூரன், சிவாஜிலிங்கம், ரவிகரன் போன்றோரால் இவ்விடயம் வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குறிப்பிடப்பட்ட விடயம் என்னவெனில், முல்லைத்தீவு-மல்லாவி நகரில் மாவீரன் பண்டாரவன்னியனின் உருவச்சிலையை எதியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் தோற்றத்தில் அமைத்திருக்கின்றார்கள். இது மாவீரன் பண்டாரவன்னியனின் மாவீரத்தையும், தமிழர்களின்வீரத்தையும்கொச்சைப்படுத்தும் ஒரு செயல் என வடமாகாணசபையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாணசபையின் 82ம் அமர்வு மாகாணசபை பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. இதன்போதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்போது மாகாணசபை உறுப்பினர் எஸ்.மயூரன் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக மேற்படி விடயத்தை சபைக்கு கொண்டு வந்தார். குறித்த விடயத்தை முன்வைத்து அவர் மேலும் குறிப்பிடுகையில், மல்லாவி நகரில் அமைக்கப்பட்டுள்ள சிலைக்கு கீழ் பண்டாரவன்னியன் என எழுதியதால் மட்டுமே அது பண்டாரவன்னியனின் சிலை என மற்றவர்களுக்குத் தெரியும். ஒரு மாவீரனின் சிலையை சோமாலியா, எதியோப்பியா போன்ற நாடுகளில் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் தோற்றத்தில் அமைத்திருக்கிறார்கள். வெளிநாட்டில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் இங்கே வருகிறவர்கள் அந்த சிலையை பார்த்தால் தமிழர்களின் வீரம் குறித்து என்ன நினைப்பார்கள்? இது பண்டாரவன்னியனை கொச்சைப்படுத்தும் ஒரு செயல் *என்றார்.*

தொடர்ந்து பேசிய மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் 25ம் அமர்வில் பண்டாரவன்னியனின் சிலையை முல்லைத்தீவு நகரில் அமைப்பதற்கான தீர்மானம்நிறைவேற்றப்பட்டுஇதற்கிடையில் பண்டாரவன்னியனை கொச்சைப்படுத்தும் செயலாகவே நான் இதைப் பார்க்கிறேன். இந்தசிலைக்குஎதிர்ப்புதெரிவித்துமல்லாவி பிரதேச மக்கள் எனக்கு கொடுத்திருக்கும் கடிதம் ஒன்றில் ஒரு மகள் தனது தந்தையை பார்த்து பண்டாரவன்னியன் போலியோ நோயினாலா இறந்தார் எனக் கேட்டதாக கூறப்பட்டுள்ளது. எனவே இந்த சிலை அமைப்பு தமிழ்மக்கள் பண்டாரவன்னியன் மீது கொண்டிருக்கும் கௌரவத்தையும், பண்டாரவன்னியனின் மா வீரத்தையும் கொச்சைப்படுத்தும் ஒரு செயல் எனச் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பேசுகையில் அந்த சிலைக்கு கீழ் 23ம் புலிகேசி என எழுதிவிடுங்கள் என்றார். இவ்வாறாக பல கருத்துக்களும் அங்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடமாகாணசபையின்உறுப்பினர்களான மயூரன், சிவாஜிலிங்கம், ரவிகரன் மூவரும் ஒருவிடயத்தைத்தெரிந்துகொள்ளவேண்டும். பண்டாரவன்னியனை நேரில் பார்த்தவர்கள் போல கருத்துக்களைத் தெரிவிப்பது சிறந்ததல்ல. வரலாறு தெரியாதவர்களும் கருத்துக்களைக் கூறுவது சிறப்பல்ல. விடுதலைப்புலிகளால் தேடப்பட்டவர்தான் சிவாஜிலிங்கம் அவர்கள். அதுமட்டுமல்லாது ஹிலாரி கிளின்ரன் வெற்றிபெறவேண்டும் என 1000 தேங்காய் உடைத்தவரும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக குருநாகலில் போட்டியிட்டவருமான இவர், தானும் செய்யாது செய்பவர்களையும் விமர்சிப்பது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. தான் அரசியலில் கோமாளித்தனமாக செயற்படுவதுபோன்று ஏனையவர்களும் செயற்படவேண்டும் என எதி[illegible]ப்பது உகந்ததொன்றல்ல.

அண்மைக்காலமாக ரவிகரன் அவர்களது செயற்பாடு மாத்திரமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்கள் வன்னிப் பரப்பில் 08 சிலைகளை அமைக்கவுள்ளார் என்பதை அறிந்தவுடன் தமது பிரதேசத்தில் தான் எந்த சிலையையும் அமைக்கவில்லை. இதனால் சிவமோகன் அவர்கள் சிலையினை அமைத்தால் மக்களின் செல்வாக்கினைப் பெற்றுவிடுவார். இதனால் அவருக்கு எதிராக அவரது செயற்பாடுகளை குறைகூறும் ஒருவராகவே ரவிகரன் அவர்கள் திகழ்கிறார் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவரைப்பொறுத்தவரை தமிழ்த்தேசியம் பேசி அரசியலில் பிழைப்பு நடத்துபவராகவே அப்பிரதேச மக்கள் கருதுகிறார்கள். விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். இவர் இவ்வாறு செயற்படுகிறாரா? அல்லது இவரை இவரது கட்சியினர் பின்புலத்திலிருந்து தூண்டிவிடுகிறார்களா? *என்கிற விடயமும் பேசப்படுகிறது.*

வடமாகாண சபையின் உறுப்பினர் மயூரன் அரசியலுக்குப் புதிதானவர். ரெலோ கட்சிக்கு தனது பணத்தை அள்ளி அள்ளி வழங்கியவர். அந்த விசுவாசத்தின் அடிப்படையில் வடமாகாண சபையின் உறுப்பினர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு வரக்கூடியவர் ரெலோவின் விசுவாசியான ரவி அவர்களே. இவரது நிலைப்பாடு பற்றி ரவி அவர்களே விமர்சித்திருந்தார். இவர் தான் ஒரு போராளி என்றும் தனது குடும்பமும் போராட்டத்தில் கலந்துகொண்டது என்றும் தேர்தல் காலங்களில் மேடைகளில் முழங்கியவர். இவரது தனிப்பட்ட வாழ்க்கையில் பல சம்பவங்கள் இருந்தாலும் அதனை அரசியலில் கொணர்ந்து இணைப்பது சிறப்பல்ல.

பொதுவாக அரசியலில் உள்ளவர்கள் கொலை, கொள்ளை, கப்பம் பெறல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களே அதிகம் இருக்கிறார்கள். இவர்கள் அரசியலுக்கு வந்தபின் சுத்தமானவர்கள் என தம்மைக் காட்டிக்கொள்வது மக்களுக்குத் தெரியாதவிடயமுமல்ல. சிவமோகன் சிலை திறந்தால் என்ன? சிவாஜிலிங்கம் சிலை திறந்தால் என்ன? சிறிதரன் சிலை திறந்தால் என்ன? அல்லது ஏனைய அரசியல்வாதிகள் சிலை திறந்தால் என்ன? இதனை விமர்சிப்பதில் மக்களுக்குத் தீர்வு கிடைக்குமா? தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டுகின்றனர். இவர்கள் மக்களில் அக்கறையுள்ளவர்கள் அல்ல. எப்படி மக்களின் பணத்தைக் கொள்ளையடிப்பது. அடுத்த தேர்தலில் தமது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்வது? என்ற குறிக்கோளில் செயற்படுகின்றார்கள்.

சிங்கள அரசியல்வாதிகளுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன. இவற்றை முன்னின்று நீதிமன்றத்துக்கு வழக்குத்தாக்கல் செய்து அந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கின்றார்களா? தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டங்கள் குறித்து சிந்திக்கின்றார்களா?

குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி சுவீகரிப்பு, மீள்குடியேற்றம், அத்துமீறிய சிலைகள் திறப்பு, சமூக கலாச்சார பிரச்சினைகள், தமிழர் வரலாறுகள் அழிக்கப்படுவதைப் பாதுகாப்பது, தேசியம், சுயநிர்ணய உரிமையை பாதுகாத்தல், தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டத்தில் ஒன்றிணைந்த சிந்தனை இவ்வாறு பொதுநோக்கில் பல விடயங்களை இவ்வரசியல்வாதிகள் ஒற்றுமையாக கையாண்டு செயற்படவேண்டும். சிவமோகன் சிலை திறந்துவிட்டார் என்பதற்காக அவரைத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது, இதுதொடர்பாக பகிரங்கமாக விமர்சிக்கும் அரசியல்வாதிகள் தாங்களது அரசியல் வங்குரோத்து நிலையினை அடைவதால் இதனைக்கொண்டு பிழைப்பு நடத்துவதற்காகவே இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். தமிழ் மக்களின் விடுதலை பற்றி அக்கறைகொள்ளாத இவர்கள் அதுபற்றிச் சிந்தித்து நடவடிக்கையினை எடுத்துள்ளார்களா? அவ்வாறு செய்திருந்தால் இவர்கள் அவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டலாம். தமிழ் மக்களின் தீர்வுகளுக்காக செயற்படாத இவர்கள் கதிரைகள், மாடுகள், ஆடுகள் வழங்குவதிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். குறிப்பாக ஊடகங்களில் எமது செய்திகள் பிரசுரிக்கப்படாதா என்கிற ஏக்கத்துடன் வாழ்கிறார்கள்.

வன்னிப் பிராந்தியத்தில் சிலைகள் அமைப்பது தொடர்பில் குறிப்பாக செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், விநோதராதலிங்கம், சிறிதரன் போன்றோர் இதற்கு முன் ஏன் சிந்திக்கவில்லை. 03தசாப்த காலங்களாக பாராளுமன்றில் இருப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு புதிய சிந்தனையோடு வன்னிப் பகுதியில் சிலைகளை அமைப்பது தவறா? சிலைகளில் குறைபாடுகள் இருந்தால் சிவமோகனின் அலுவலகத்திற்குச் சென்று இதனைத் திருத்தி இவ்வாறு அமையுங்கள் எனக்கூறுவது ஒரு சிறந்தவனுக்கு ஏற்புடையது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்களுக்கு சார்பாக இச்செய்தியை எழுதுவதாகக்கூட பலர் கருதலாம். ஆனால் இதுவரை காலமும் சிலைகள் வைக்கவேண்டும் என பாராளுமன்ற அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் சிந்திக்காமல் போனது ஏன்? இவ்வாறு விமர்சிப்பவர்கள் தேசியம், சுயநிர்ணய உரிமைக்காக எங்கே? எப்போது? குரல் எழுப்பினீர்கள். தமிழ் மக்களுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் வெற்றிபெற்றுள்ளீர்களா?

தமிழினம் ஒற்றுமையாக வாழ்வதற்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். தமிழ்க் கட்சிகள் ஒற்றுமையினை வளர்ப்பதில் முழுமூச்சாக செயற்படவேண்டும். கட்சிகளை ஒன்றிணைக்கும் நோக்கில் சுரேஸ் அவர்கள் செயற்பட்டுவந்தார். அவரை ஏனைய கட்சிகள் ஓரங்கட்டின. அவருடன் ஏனைய கட்சிகள் கைகோர்த்திருந்தால் இன்று தமிழரசுக்கட்சியினை ஓரங்கட்டியிருக்கலாம். பதவிக்காக ஆசைப்பட்டு வைகுண்டத்தில் இருக்கும் செல்வம் அடைக்கலநாதனும், அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை தக்கவைத்துக்கொள்வதற்காக செயற்படும் சித்தார்த்தனும் தமிழரசுக்கட்சியின் வாலைப்பிடித்துக்கொண்டு இன்னமும் அரசியல் செய்கிறார்கள். புளொட் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் பவான் அவர்கள் இச்சிலை திறப்பு தொடர்பாக ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். சட்டத்திற்குப் புறம்பாக சிலை திறந்திருந்தால் அது அகற்றப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் பண்டாரவன்னியன் சிலையினை கேவலப்படுத்தவும், அரசியல்வாதிகளிடம் பிரிவினைகளை மேற்கொண்டு ஒற்றுமையுடன் செயற்படாததை ஏற்றுக்கொள்ள முடியாது.

காந்தி சிலை என்பது உலக நாடுகள் எங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. அதனை வீழ்த்தியிருப்பதென்பது அஹிம்சைப் போராட்டத்தை அவமதிக்கும் ஒரு செயல். பொதுவாக அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இவ்விடயத்தில் போட்டி இருக்கலாம். பொறாமை இருக்கக்கூடாது. ஒருவர் ஒன்றிணைச் செய்கிறார் எனில் அதனைவிட பன்மடங்காக நான் செய்யவேண்டும் என்பதை அரசியல்வாதிகள் கொண்டிருக்க வேண்டும். இன்று அரசை விட முஸ்லீம் அரசியல்வாதிகள் தமிழருக்கு எதிராக மாறியுள்ளார்கள். அவர்களை அரசியலில் இருந்து வெளியேற்றவேண்டும். அல்லது ஒன்றிணைந்து செயற்பட அழைப்பு விடுக்கவேண்டும். இன்று தனியான அலகுக்காக வடகிழக்கினை இணைக்கவிடாது பிளவுபடுத்தும் நோக்கில் இவர்கள் செயற்படுகிறார்கள்.

சிலைகளை விமர்சிக்கும் அரசியல்வாதிகளிடம் ஒன்றிணைக் கேட்க விரும்புகிறேன். முஸ்லீம் அரசியல்வாதிகளுக்கு எதிராக நீங்கள் என்ன செய்துள்ளீர்கள். அவர்களுக்கு ஏன் பயப்படுகிறீர்கள். கிழக்கினை முஸ்லீம்களிடம் தாரை வார்த்துக்கொடுப்பதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சம்பந்தனும் மிக முக்கிய காரணம். இதில் சுமந்திரன் அவர்களும் உடன் கட்டை ஏறியுள்ளார்.தமிழ் மக்களுக்கானத் தீர்வுத்திட்டம் தொடர்பில் மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வைக் கொண்டுவாருங்கள். தமிழரசுக்கட்சியினது காலைப் பிடிக்கவேண்டிய தேவை ஏற்படாது. எதை விமர்சிக்கவேண்டும் விமர்சிக்கக்கூடாது என்பதை முதலில் கற்றுக்கொள்ளுங்கள். ஐ.நா சபை தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளைக் கொணர முயற்சிக்கிறது.

12ஆம் பக்கம் பார்க்க...

சுழியோடி

# இலங்கை முஸ்லீம்களுக்கு புதிய அரசியல் யாப்பு நன்மை பயக்குமா?



இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வினைநோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. இலங்கையின் அரசியல் யாப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினர் விளங்குவதனை இல்லாமல் செய்வதற்கான முன் ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கு ஏற்ப சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களை ஆளுந்தரப்பினர் தயார்படுத்தி வைத்துள்ளார்கள். ஆளுந்தரப்பினரின் இந்த செயற்திட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்களாக முஸ்லீம் சமூகம் இருக்கப்போகின்றது.

இதனை முஸ்லீம் அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளின் மூலமாகவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துக்களின் மூலமாகவும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இத்தருணத்தில் முஸ்லீம் சிவில் அமைப்புக்களும், பொது மக்களும் விழித்துக்கொள்ளவேண்டும். இல்லாதுவிடின் முஸ்லீம்கள் தமது விகிதாசாரத்திற்கு குறைவான பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அரசியல் பலமற்றதொரு சமூகமாக வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்படுவதனை தவிர்க்க முடியாது. முஸ்லீம்கள் இந்த ஆபத்தை அலட்சியம் செய்துகொள்ள முடியாது.

கடந்த காலங்களைப்போன்று முஸ்லீம் அரசியல் தலைவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி இனியும் இருப்பார்களாயின் தமது எதிர்கால சந்ததியினருக்கு செய்கின்ற மிகப்பெரிய வரலாற்றுத் துரோகமாகவே இருக்கும். 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் கொண்டு வரப்பட்ட அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி அதிலுள்ள தேர்தல் முறையையும், நிறைவேற்று ஜனாதிபதி முறையையும் ஒழித்து மாற்றுத் திட்டங்களை முன்வைக்கவுள்ளார்கள். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பூரண சம்மதம் தெரிவித்துள்ளது. அக்கட்சி தமிழர்களுக்கு எத்தகைய தீர்வு வேண்டுமென்று அறுதியாக கூறியுள்ளதுடன், தமது யோசனைத் திட்டத்தையும் முன்வைத்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸும் அரசியல் மாற்றத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளது. ஆனால், இக் கட்சி இன்னும் முஸ்லீம்கள் சார்பான அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கு தாங்கள் விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதற்கு தயார் என்று மாத்திரம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஏனைய முஸ்லிம் கட்சிகளும் அரசியல் யாப்பு மாற்றத்திற்கு ஆதரவாகவே உள்ளது.

1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட விகிதாசார தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதென்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸும், தேசிய காங்கிரஸும் தெரிவித்துள்ளது. இக்கட்சிகள் வடக்கும், கிழக்கும் பிரிந்திருக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், முஸ்லீம் காங்கிரஸ் விகிதாசார தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

வடக்கும், கிழக்கும் இணைய வேண்டுமா? அல்லது பிரிய வேண்டுமா? என்பதில் தெளிவற்ற போக்கை கடைப்பிடித்துக்கொண்டிருக்கின்றது. இக்கட்சி அரசியல் யாப்பு மாற்றத்தில் கூட தமது வழமையான நழுவல் போக்கையே கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் அரசியலுக்கு தலைமை வகித்துக்கொண்டிருக்கும் அரசியல் கட்சியாக உள்ள முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் யாப்பு மாற்றத்திலும் நழுவல் போக்கை கடைப்பிடித்துக்கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கும், கிழக்கும் இணைக்கப்படல் வேண்டும். இதற்கு முஸ்லீம்களும் ஆதரவு தரவேண்டும். இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படும். வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது ஒரு முதலமைச்சருடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல என்று தெரிவித்துள்ளார். இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லீம்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடிக்கடி தெரிவித்துக்கொண்டிருப்பதன் மூலம் அக்கட்சிக்கு புதிய அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படவுள்ள விடயதானங்கள் தெளிவாகத் தெரியும் என்று கருத முடியும்.

புதிய அரசியல் யாப்பில் எவ்வாறான அதிகாரங்கள் சிறுபான்மையினருக்கு வழங்கப்படவுள்ளன என்று இன்னும் பகிரங்கமாக தெரியாது. புதிய அரசியல் யாப்பு இவ்வாறுதான் அமையவுள்ளதென்று அரசாங்கம் கூடத் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் வடக்கும், கிழக்கும் இணையும் போது முஸ்லீம்களின் அபிலாசைகளுக்கு பாதிப்பு ஏற்படாது என்று எவ்வாறு இரா.சம்பந்தனால் உறுதி கூற முடியும்?

இணைந்த வடக்கு, கிழக்கை வேண்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள அரசியல் தீர்வு விடயத்தில் முஸ்லீம்களின் அபிலாசைகள் குறித்து முன்வைத்துள்ள யோசனைகள் யாவை என்று தெரிவிக்காத நிலையிலும், முஸ்லீம் காங்கிரஸ் உள்ளிட்ட முஸ்லீம் கட்சிகள் எந்தவொரு அரசியல் தீர்வு யோசனையையும் முன்வைக்காது இருக்கின்ற நிலையிலும் முஸ்லீம்களினால் இணைந்த வடக்கு, கிழக்கிற்கு மாத்திரமன்றி புதிய அரசியல் யாப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

வடக்கும், கிழக்கும் இணைவதாக இருந்தாலும், இவ்விரு மாகாணங்களும் தனித்தனியாக செயற்படுவதாக இருந்தாலும், புதிய அரசியல் யாப்பு என்று ஒன்று வர வேண்டுமாயின் அதில் என்ன இருக்கின்றதென்று தெரிந்துகொள்ளாமல் ஆதரிக்க முடியாது. எதுவுமே தெரியாத நிலையில் முஸ்லீம் கட்சிகள் குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸ் புதிய அரசியல் யாப்புக்கு ஆதரவு அளிக்குமாயின் அச்செயல் அடிமைத்தனத்திற்கு சமமாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இணைந்த வடக்கு, கிழக்கு வேண்டுமென்று பகிரங்கமாக உரத்த குரலில் கேட்டுக் கொண்டிருக்கையில் முஸ்லீம் காங்கிரஸும் ஏனைய முஸ்லீம் கட்சிகளும் மௌனமாக அரசாங்கம் தருவதையோ அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அதிஉச்ச வேண்டுகோள்களை நிறைவேற்றும் வகையிலோ அமையும் புதிய அரசியல் யாப்பை ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போது நடைமுறையில் உள்ள 1978ஆம் ஆண்டைய அரசியல் யாப்புக்கு மாற்றமாக முஸ்லீம் கட்சிகள் புதிய அரசியல் யாப்புக்கு ஆதரவு தெரிவிக்கவேண்டுமாயின் புதிய அரசியல் யாப்பு மூலமாக முஸ்லீம்கள் இன்று பெற்றுக்கொண்டிருக்கும் பயன்களை விடவும் கூடுதல் பயன்கள் கிடைக்க வேண்டும். அதனை அறிந்துகொள்ள வேண்டுமாயின் புதிய அரசியல் யாப்பில் உள்ளவைகள் தெரியவேண்டும்.

1978ஆம் ஆண்டின் பின்னர்தான் 20இற்கும் குறையாத முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அது மாத்திரமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதில் முஸ்லீம்களின் வாக்குகள் மிகப் பெரிய செல்வாக்கு செலுத்தி வந்துள்ளன. இதனால், முஸ்லீம்களை பகைத்துக் கொண்டு எந்தவொரு ஜனாதிபதியாலும் செயற்பட முடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பௌத்த இனவாதிகளின் அடக்கு முறைகளை கண்டு கொள்ளாதிருந்தமையால் அவர் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தார். அவருக்கு எதிராக முஸ்லீம்கள் வாக்களித்து தமது வாக்குப் பலத்தைக் காட்டினார்கள். இன்று மஹிந்த ராஜபக்ஷ தான் முஸ்லீம்களின் விடயங்களில் பிழையாக வழி நடத்தப்பட்டதாக வருத்தம் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார். முஸ்லீம்களின் ஆதரவை மீண்டும் கோருகின்றார். இந்நிலை புதிய அரசியல் யாப்பில் ஏற்படுவதற்கு எந்த அறிகுறிகளுமில்லை.

ஆகவே, முஸ்லீம்களை பொறுத்தவரை 1978ஆம் ஆண்டை விடவும் சிறப்பானதொரு அரசியல் யாப்பு வருமா என்பது சந்தேகமாகும். இதனை விடவும் சிறப்பானதொரு அரசியல் யாப்பையே முஸ்லீம்களினால் ஆதரிக்க முடியும். ஆனால், இன்று முஸ்லீம் கட்சிகள் புதிய அரசியல் யாப்பில் முஸ்லீம்களின் நலன்களை கருத்திற்கொள்ளாது. அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஆதரவு அளித்துக்கொண்டிருப்பது முஸ்லீம்களின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைப்பதற்கு சமமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லீம்களின் அபிலாசைகளுக்கு பாதிப்பு ஏற்படாதென்று தெரிவித்துக்கொண்டிருக்கின்றார். முஸ்லீம்களையும் அரவணைத்துக்கொண்டு செல்லவேண்டுமென்ற எண்ணங்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அக்கட்சியுடன் நெருக்கமான உறவுகளை பேணிக்கொண்டிருக்கும் முஸ்லீம் காங்கிரஸும் இணைந்து புதிய அரசியல் யாப்பில் சிறுபான்மையினரின் அபிலாசைகளை உள்ளடக்கிய ஆலோசனைகளை முன்வைக்க முடியவில்லை. முஸ்லீம் கட்சிகளுக்கும், முஸ்லீம் காங்கிரஸிற்கும் தெரியாமல் தமது அரசியல் ஆலோசனைகளை அரசாங்கத்திடமும், சர்வதேசத்திடமும் முன்வைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கோரிக்கைகளுக்கு முஸ்லீம்களின் ஆதரவையும் கோரிக்கொண்டிருப்பதும். அதற்கு முஸ்லீம் காங்கிரஸ் மௌனமாக இருப்பதும் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துக்கொண்டிருக்கின்றன.

புதிய அரசியல் யாப்பை வேண்டி நிற்கும் முஸ்லீம் கட்சிகளிடம் முஸ்லீம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் சில கேள்விகளைக் கேட்டுள்ளார். அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை தீர்மானிக்கின்ற அந்தஸ்து இருக்கவேண்டுமா, வேண்டாமா என்று சொல்லவேண்டும். மாவட்ட முறையில் 05வீத வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்த முறை இருக்கவேண்டுமா, தேவையில்லையா என்று சொல்லவேண்டும். 1978 ஆம் ஆண்டின் பின்னர் முஸ்லீம்கள் பேரம் பேசும் சக்தியாக உள்ளார்கள். இந்த சக்தி இருக்கவேண்டுமா, இல்லையா என்று சொல்லவேண்டும். புதிய யாப்பு மாற்றத்தின் பின்னர் முஸ்லீம்களுக்கு இந்த அரசியல் சக்திகள் இருக்குமா என்று சொல்லவேண்டும். கிழக்கு முஸ்லீம்களின் அபிலாசையாக உள்ள எங்களை நாங்களே ஆளும் தனி அலகு இருக்குமா இல்லையா என்று சொல்ல வேண்டும். ஒளித்து நாடகமாடக்கூடாது.

முஸ்லீம் காங்கிரஸ், அகில மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் எந்தக் கட்சியாக இருந்தாலும் எங்களுக்கு யாப்பு மாற்றம் தேவையில்லை என்று ஒரு வரிதான் எழுத வேண்டும். நமக்கு எல்லாமே 1978ஆம் ஆண்டில் இருக்கின்றது. வேறு எந்த யாப்பும் முஸ்லீம்களுக்கு இதுபோன்று இருக்காது. அதுதான் இணக்க அரசியல் யாப்பை தந்தது. அதுதான் முஸ்லீம்களை பேரம்பேசும் சக்தியாக மாற்றியது. அதுதான் 17 வருடங்கள் ஆட்சி செய்த ஐ.தே.கவின் ஆட்சியை மாற்றியது எனக் கேட்டுள்ளார். இவரின் இக்கேள்விகளுக்குரிய நியாயமான பதில் மூலம்தான் புதிய அரசியல் யாப்பை முஸ்லீம்கள் ஆதரிக்க வேண்டுமா என்று தீர்மானிக்கவேண்டும்.

முஸ்லீம் கட்சிகள் ஒரு தனி நபரின் அபிலாசைகளுக்கும், சிலரின் பதவி மோகங்களை மையப்படுத்தியுமே முடிவுகளை எடுத்துச் செயற்பட்டு வந்துள்ளன. அவ்வாறுதான் புதிய அரசியல் யாப்பு விடயத்திலும் முஸ்லீம் கட்சிகளின் செயற்பாடுகள் அமையவுள்ளன. தாங்கள் வெற்றி பெறுவதற்குரிய தேர்தல் தொகுதியை பெற்றுக்கொண்டு முழு முஸ்லீம் சமூகத்தையும் வீதியில் நிறுத்துவதற்கு துணைபோய்க்கொண்டிருக்கின்றார்கள்.


இஸ்லாம் மார்க்கம் கூட எழுத்து மூலம் உடன்படிக்கைகளை வைத்துக் கொள்ளுமாறு சொல்லிக்கொண்டிருக்கையில் குர்ஆன், ஹதீஸ் என்று கட்சியின் யாப்பை வைத்துக்கொண்டு புதிய அரசியல் யாப்பு எதனைத் தரப்போகின்றதென்று தெரியாமல் அல்லது தெரிந்தும் மக்களுக்கு அதனை தெரிவிக்காமல் தாங்களின் தனிப்பட்ட அபிலாசைகளுக்காக சமூகத்தின் எதிர்கால சந்ததியினரை சந்தியில் நிறுத்த முனைந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு முஸ்லீம் அரசியல் தலைமைகள் செயற்பட்டுக்கொண்டிருப்பதனை முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் வெளிப்படையாக சுட்டிக்காட்டவேண்டும். முஸ்லீம்களின் அபிலாசைகள் இவைதான் என்று அடையாளப்படுத்தி அவற்றை அடைந்து கொள்வதற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். முஸ்லீம்களின் எதிர்காலத்தை முஸ்லீம் கட்சிகளிடமோ, அரசாங்கத்திடமோ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடமோ ஒப்படைக்க முடியாது. எங்களின் தலைவிதியை நாங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். இதனை ஒளித்து வைத்து நாடகமாடி, நல்லது நடக்கும் என்று சொல்லிக்கொண்டு, விட்டுக்கொடுப்புக்கு தயார் என்று எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டு, அரசாங்கத்தின் அமைச்சர் பதவிகளுக்கு வாய் பிளந்துகொண்டு, கொந்தராத்துக்களுக்காக சேவகம் செய்துகொண்டு, தமது கடந்தகால குற்றங்களை மறைப்பதற்காக எல்லாவற்றிற்கும் தலையசைத்துக் கொண்டு செயற்பட்டுக்கொண்டிருக்கும் முஸ்லீம் கட்சிகளிடமும், அவற்றின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடம் முஸ்லீம் சமூகத்தின் எதிர்காலத்தை ஒப்படைக்க முடியாது.

16ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்ற அந்நியர் ஆட்சிக்கு இலங்கைத்தீவு உட்பட்டிருந்தது. 1802ஆம் ஆண்டு முதல் இலங்கை முடிக்குரிய ஒரு குடியேற்ற நாடாக மாறியது. இதிலிருந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் சிவில் நிர்வாகம், நீதிப்பரிபாலனம், நிர்வாக விடயங்கள் பிரித்தானிய அரசினால் இலங்கையில் நியமிக்கப்பட்டிருந்த தேசாதிபதியால் நிறைவேற்றப்பட்டன. அதனைத்தொடர்ந்து 1833இல் பிரித்தானியரால் கோல்புறுக் கமரன் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது நாட்டின் அரசியலமைப்புத் துறையில் அடித்தளத்தினை வேரூன்ற ஏதுவாக அமைந்தது. அதனையடுத்து 1912இல் குறு மக்கலம் சீர்திருத்தங்கள் 1922இல் மனிங் சீர்திருத்தங்கள், 1924இல் மனிங் டிவன்சயர் சீர்திருத்தங்கள் இடம் பெற்றன. தொடர்ந்து 1931ஆம் ஆண்டில் டொனமூர் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

# சிரியாவும், உலகப் போருக்கான போர்முரசும்



கஸ்பியன் கடலில் 900 மைல்களுக்கும் அதிக தூரத்தில் நிறுத்தப்பட்ட போர்க் கப்பல்களிலிருந்து சுமார் 26 கப்பற்படை ஏவுகணைகளை வீசி, சிரியாவில் ரஷ்யா அதன் முதல் வார விமான தாக்குதல்களை நிறைவு செய்துள்ள நிலையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா இரண்டினதும் ஆளும் வட்டார விவாதங்களில் இன்னும் அதிக அபாயகரமான மோதல் குறித்த மற்றும் உலகப்போர் குறித்த, அச்சுறுத்தல்களின் மற்றும் எச்சரிக்கைகளின் தீவிர போர்முரசு மேலோங்கியுள்ளது.

சிரியாவில் குண்டுவீச பிரெஞ்சு போர் விமானங்களுக்கு உத்தரவிட்டுள்ள பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்சுவா ஹலாண்ட், அந்நாட்டின் சம்பவங்கள் ஒரு "முழுப் போராக" வடிவெடுக்கக்கூடும். அதிலிருந்து ஐரோப்பாவே கூட "தப்பவியலாது" என்று புதனன்று ஐரோப்பிய சட்டவல்லுனர்களை எச்சரித்தார்.

ரஷ்ய போர் விமானங்கள் துருக்கிய வான் எல்லைக்குள் விலகிப் போயிருந்ததாகக் கூறப்படும் சம்பவங்களை பற்றிற்கொண்ட துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன், வடக்கு அட்லாண்டிக் உடன்படிக்கையின் ஐந்தாவது ஷரத்தை மறைமுகமாக சுட்டிக்காட்டும் வகையில், "துருக்கி மீதான ஒரு தாக்குதல் என்பது நேட்டோ மீதான ஒரு தாக்குதலாகும்." என்று அறிவித்தார்.


அந்த ஷரத்து துருக்கி மீதான அல்லது வேறெந்தவொரு அங்கத்தவ அரசின் மீதான ஒரு தாக்குதலுக்கு எதிராக ஓர் ஆயுதமேந்திய விடையிறுப்புக்கு, அமெரிக்க தலைமையிலான இராணுவ கூட்டணியின் அங்கத்தவர்களைக் கடமைப்பாடு கொள்ளச்செய்கிறது.

சிரியாவை சூறையாடியுள்ள ISIS மற்றும் அல்-நுஸ்ரா முன்னணி போன்ற இஸ்லாமிய போராளிகள் குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பிரதான ஆதாரங்களில் ஒன்றான துருக்கிய அரசாங்கம், ஈராக்கில் உள்ள குர்திஷ் முகாம்கள் மீது குண்டுவீச்சு தாக்குதல்களை நடத்தியும் மற்றும் சிரிய எல்லைக்குள்ளே பறக்கும் சிரிய விமானங்களைச் சுட்டுவீழ்த்தியும், அதன் சொந்த அண்டை நாடுகளின் வான் எல்லைகளை அது வழமையாக மீறி வருகிறது.

உயர்மட்ட நேட்டோ அதிகாரிகளும், மாஸ்கோ மீதான போர்வெறியூட்டல் கண்டனங்களுக்கு அழுத்தம் சேர்த்திருக்கிறார்கள். நேட்டோ பொது செயலர் ஜென்ஸ் ஸ்டொல்டென்பேர்க், துருக்கிய வான் எல்லைக்குள் குற்றகரமான ரஷ்ய ஊடுருவல் என்பது "ஒரு தற்செயலான சம்பவமாக தெரியவில்லை" என்று குற்றஞ்சாட்டினார்.

அவர் தொடர்ந்து, "சம்பவங்களும், எதிர்பாரா நிகழ்வுகளும் அபாயகரமான சூழலை உருவாக்கிவிடும். ஆகவே அதுபோல மீண்டும் ஏற்படாதவாறு உறுதிப்படுத்திவைப்பது முக்கியமாகும்." என்று எச்சரித்தார்.

செவ்வாயன்று வோஷிங்டனில் பேசுகையில், இத்தாலியின் நாப்லெஸின் நேட்டோ கூட்டு நேசப்படை



கட்டளையகத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள மார்க் ஃபேர்குஷன், ஆர்டிக் வட்டாரத்தில் தொடங்கி மத்திய தரைக்கடல் பகுதி வரையில் "எஃகு வளைவை" (arc of steel) கட்டமைத்து வருவதற்காக ரஷ்யாவை கண்டித்தார்.

வின்ஸ்டன் சேர்ச்சிலின் 1946 "இரும்புத்திரை" உரையிலிருந்து ஆழ்ந்து ஆராய்ந்து எடுக்கப்பட்ட இந்த சாராம்சம், சக்திகளின் நிஜமான உறவுகளைத் தலைகீழாக திருப்புகிறது.

இது, 25 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதற்குப் பின்னர் வாஷிங்டனும் நேட்டோ கூட்டணியும் தயவுதாட்சண்யமின்றி ரஷ்யாவைச் சுற்றிவளைத்ததை மூடிமறைக்கிறது.

ரஷ்யாவை நேட்டோ முகங்கொடுக்கும் "மிகவும் அபாயகரமான அச்சுறுத்தலாக" வர்ணித்து, அட்மிரல் ஃபேர்குஷன், நேட்டோ மாஸ்கோவை நோக்கி அதிகரித்தளவில் ஆக்ரோஷமான தோரணையை ஏற்க அழைப்புவிடுத்தார்.

"நிஜமான உலகநடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு உகந்த விதத்தில்" இராணுவப் படைகளை நிலைநிறுத்தவும் மற்றும் கூட்டணியின் "போர் புரியும் திறன்களை" மெருகூட்டவும் அவர் பரிந்துரைத்தார்.

முன்னாள் உயர்மட்ட அமெரிக்க அதிகாரிகளின் கண்ணோட்டங்களும் ஐயத்திற்கிடமின்றி அமெரிக்க ஆளும் ஸ்தாபகம் மற்றும் அதன் பரந்த இராணுவ மற்றும் உளவுத்துறை கூட்டிணைப்பின் சக்திவாய்ந்த பிரிவுகளில் நிலவும் சிந்தனைகளையே பிரதிபலிக்கின்ற நிலையில், அவர்களும் ரஷ்யா உடனான மோதலுக்கு அழைப்புவிடுப்பதில் அழுத்தம் சேர்த்துள்ளனர்.

கார்ட்டர் நிர்வாகத்தில் தேசிய பாதுகாப்புத்துறை செயலராக இருந்தவரும் நீண்டகால அமெரிக்க ஏகாதிபத்திய மூலோபாயவாதியுமான Zbigniew Brzezinski, பைனான்சியல் டைம்ஸில் பிரசுரித்த கட்டுரை ஒன்றில், சிஐஏ-ஆதரவிலான இஸ்லாமிய போராளிகள் குழுக்களை ரஷ்யா தாக்குவது "அமெரிக்க பதிலடியைக் தூண்டும்" என்று எழுதினார்.

வோஷிங்டனிலுள்ள ஏனையவர்களைப் போலவே, அவரும் இத்தகைய போராளிகள் குழுக்களில் மிக முக்கியமான ஒன்றாக சிரியாவில் அல்கொய்தாவுடன் இணைப்புகொண்ட அல்-நுஸ்ரா முன்னணி உள்ளது என்பதைக் குறிப்பிடாமல் தவிர்த்துக்கொண்டார்.



"சிரியாவில் ரஷ்ய கடற்படை மற்றும் விமானப்படையின் பிரசன்னம், அவர்களது தாய் நாட்டிலிருந்து புவியியல் ரீதியில் தனிமைப்பட்டு இருப்பதால் பலவீனமாக இருப்பதாகவும்", "அவர்கள் அமெரிக்காவை விடாது தூண்டினால், 'ஆயுதங்களை' செய்யலாம் என்றும் Brzezinski ஆலோசனை வழங்கினார்.

புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில், அவர் "இராணுவ ரீதியில் துடைத்தழிக்கும்" ஒரு வழக்கு மொழியைப்பயன்படுத்தியதற்கு அறிகுறியாக, "ஆயுதங்களை செய்தல்" என்பதை மேற்கோளிட்டு காட்டியிருந்தார்.

அதேபோல, 2013 மத்தி வரையில் நேட்டோவிற்கான ஒபாமாவின் தூதராக இருந்த Ivo Daalder, Politico கூறுகையில், "அங்கிருந்து அவர்களது இராணுவப்படைகளை நாம் வெளியேற்ற விரும்பினால், ஒப்பீட்டளவில் அனேகமாக நமது தரப்பிலிருந்து குறைந்த விலை கொடுத்தோ அல்லது விலை கொடுக்காமலேயோகூட அதை செய்துவிட முடியும்.

புட்டினின் விடையிறுப்பு என்னவாக இருக்கும் என்பது தான் கேள்வி. சூழ்நிலை வரும் போது நீங்கள் இதைக்கொண்டு விளையாடவேண்டியிருக்குமென நான் நினைக்கிறேன்." என்றார்.

இதற்கிடையே சிரியா மாற்றத்திற்கான ஒபாமாவின் முன்னாள் சிறப்பு தூதர் ஃப்ரெட்ரிக் ஹோஃப், 1962 ஒக்டோபரில் கியூப ஏவுகணை நெருக்கடியின் போது நிகிடா குருஷேவின் நடவடிக்கைகளோடு புட்டினின் நடவடிக்கைகளை ஒப்பிட்டார்.

அந்நெருக்கடி உலகை அணு ஆயுத போரின் விளிம்பிற்குக் கொண்டு வந்திருந்தது. "50 ஆண்டுகளுக்கு முன்னர் அவருக்கு முன்னிருந்தவரைப் போலவே, இவரும் அமெரிக்க ஜனாதிபதியின் பாகத்தில் பலவீனத்தை உணர்கிறார்.

அவருக்கு முன்னிருந்தவரைப் போலவே, இவரும் அமெரிக்காவுடன் அற்பத்தனமாக நடந்துகொள்வது ஒரு ஆரோக்கியமான நகர்வல்ல என்பதைக் கண்டறியும் அபாயத்தில் இறங்குகிறார். ஆனால் அதுபோன்றவொரு அபாயம் எல்லா ஆபத்தான விவகாரங்களையும் உள்ளடக்கியுள்ளது." என்றார்.

பைனான்சியல் டைம்ஸின் வெளியுறவு விவகாரங்களுக்கான தலைமை கட்டுரையாளர் Gideon Rachman, இத்தகைய சர்ச்சைகளின் அச்சுறுத்தலான விளைவுகளைத் தருவித்து, சிரியா சண்டையை 1930களின் ஸ்பானிஷ் உள்நாட்டு போருடன் ஒப்பிட்டார்.

அவர் எழுதினார்: "அதே போன்றவொரு பினாமி போர்தான் சிரியாவில் இன்று நடந்து கொண்டிருக்கிறது. ரஷ்யா மற்றும் அமெரிக்கா இரண்டினது விமானப்படைகளும் அந்நாட்டின் இலக்குகள் மீது குண்டுவீசி வருகின்றன, அன்னியநாட்டு போராளிகள் உள்ளே பெருக்கெடுத்து வருகின்றனர்." என்றார்.

அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்: "1930களில் ஸ்பெயினில் எதிரெதிர் தரப்புகளை ஆதரித்துவந்த அந்நாடுகள், 1940களில் நேரடியாக ஒன்றையொன்று தாக்கத் தொடங்கியிருந்தன.

சிரியா சண்டை, ஈரானியர்களுக்கும் சவுதியர்களுக்கும் இடையிலான, அல்லது ரஷ்யர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இடையிலான ஒரு நேரடி மோதலுக்கே கூட இட்டுச் செல்லும் அபாயத்தை உதறிவிட முடியாது".

ரஷ்ய அரசையும் மற்றும் ரஷ்யாவின் எரிசக்தித்துறை நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற செல்வந்த தட்டுக்களின் ஆளும் வர்க்கத்தினது நலன்களையும் பாதுகாப்பதற்காக தொடங்கிய ரஷ்யாவின் தலையீடு, சிரியாவில் ஆட்சி மாற்றத்திற்கான மற்றும் தசாப்தங்களுக்கு முன்னர் இருந்து மத்திய கிழக்கு வரைபடத்தைத் மாற்றி வரைவதற்கான, அமெரிக்காவின் திட்டங்களை நடைமுறையில் தடுத்துள்ளதால் இந்த அபாயம் நிலவுகிறது.

அம்மண்ணில் பினாமி படைகளை ஆதரித்து சிரியாவில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவரும் பரிந்துரை, இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே அப்போதைய இஸ்ரேலிய பிரதம மந்திரி பென்ஜமின் நெத்தன்யாஹூவால் ரிச்சார்ட் பேர்ல், டக்ளஸ் ஃபெத் மற்றும் டேவிட் உர்ம்சர் உள்ளடங்கிய ஒரு ஆய்வு குழுவால் வரையப்பட்ட, "ஒரு தெளிவான முறிவு: அதிகார எல்லையைப் பாதுகாப்பதற்கான ஒரு புதிய மூலோபாயம்" என்று தலைப்பிட்ட ஒரு ஆவணத்தில் முன்வைக்கப்பட்டது.

அம்மூவரும் பின்னர் புஷ் நிர்வாகத்தில் உயர்மட்ட பதவிகளைப் பெற்றதுடன், ஈராக்கிற்கு எதிரான ஆக்ரோஷமான அமெரிக்க போரைத் தொடங்குவதற்கான சூழ்ச்சியிலும் பங்குபற்றினர்.

**10ஆம் பக்கம் பார்க்க...**

Bill Van Auken

# பிராந்தியச் செய்திகள்


## வரட்சியான காலநிலையால் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிப்பு

வரட்சியான காலநிலை காரணமாக நாடுமுழுவதும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் நில்வும் வரட்சியான காலநிலை 9 மாவட்டங்களுக்கு தாக்கம் செலுத்துவதாக காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதே வேளை, நாடுமுழுவதுமுள்ள நீர்த் தேக்கங்களில் நீர்மட்டமானது குறைவடைந்துள்ளதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது. மலையகத்தில் நீர் உற்பத்தியாகும் பகுதிகளில் நீர் மட்டம் குறைந்துள்ளதன் காரணமாக குறித்த பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் தாழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரட்சிக்காலநிலைகாரணமாகநீரைச் சிக்கனமாகப்பயன்படுத்துமாறுதேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தலைவர் கே.ஏ.அன்சார் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். வாகனங்களைக் கழுவுதல், வீட்டுத் தோட்டம், விலங்குகளை குளிப்பாட்டுதல்



போன்ற நடவடிக்கைகளுக்கு மாற்று நடவடிக்கைகளைப் பயன்படுத்துமாறு அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது நிலவும் வரட்சியுடனான காலநிலையை எதிர்கொள்வதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை திட்டம் வகுத்துள்ளது. கண்டி, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலேயே கடும் வரட்சிக் காலநிலை நிலவுகின்றது. இந்த மாவட்டங்களில் நீரை விநியோகிப்பதற்கு முறையான வேலைத்திட்டம் முன்னெடுக் கப்படவுள்ளதாகவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தலைவர் கே.ஏ.அன்சார் தெரிவித்துள்ளார்.



## மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களுக்கான உதவித்திட்டம் வழங்கி வைப்பு

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நட்டாங்கண்டல் விளை யாட்டு கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களும், பொன்னகர், விநா யகபுரம், பூவரசங்குளம் கிராமங்களை உள்ளடக்கி தகர கொட்டகைகளும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வைத்திய கலாநிதி சி.சிவமோகன் கலந்துகொண்டு பொருட்களை வழங்கி வைத்ததோடு தனது கருத்துக்களை தெரிவித்தார். பொது அமைப்புகளுக்கு வழங்கப்படுகின்ற இப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டு மக்களின் தேவைகளுக்கு வழங்கி உதவ வேண்டும் என்றும், தொடர்ந்தும் இது போன்ற உதவித்திட்டங்கள் ஏனைய கிராமங்களுக்கும் வழங்கப்படும். இந்த அமைப்பு திறம்பட செயற்பட்டு கிராமங்களில் நடைபெறும் பொதுநிகழ்வுகள், மரண நிகழ்வுகள் என்பனவற்றுக்கு இலவசமாக வழங்கி மக்களுக்கு பணியாற்ற முன்வர வேண்டும் என்றார். இந்நிகழ்வில் பிர தேச செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர், விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், கிராம பொது அமைப்புக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## நதிகளில் கடல்நீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை

பிரதான நதிகளில் கடல் நீர் கலக்காமலிருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகநீர் வழங்கல்மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கானதற்காலிகநடவடிக்கையாகமணல் மூட்டைகளை இட்டு தடைகளை ஏற்படுத்தி பிரதான நதிகளில் கடல் நீர் கலக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதே வேளை, நதிகளில்நீர்மட்டம்குறைவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. களுத்துறை பகுதியில் பாரிய நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நீர்த்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய பௌசர்கள் ஊடாக நீர்வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. இருப்பினும், இந்த தற்காலிக நடவடிக்கை சரியான தீர்வாக அமையாது. தமக்கு நிரந்த தீர்வொன்று வேண்டும் என குறித்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.



## மழை வேண்டி இரணைமடுவில் குடைபிடித்து விசேட வழிபாடு

தற்போது நாட்டில் நிலவும் வரட்சி காரண மாக பல்வேறு பகுதிகளில் விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றது. கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்திலும் மழைவேண்டி விவசாயிகளால் குடைபிடித்து விசேட வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரட்சிகாரணமாககிளிநொச்சிமாவட்டத்தில்பல ஏக்கர் வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன. இந்த நிலையில் மழைவேண்டி கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். கடந்த ஞாயிறு காலை இரணைமடு குளத்திலிருந்து குடை பிடித்தவாறு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தை நோக்கி ஊர்வலமாக சென்றடைந்து அங்கு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிபிள்ளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி சுதாகரன், கமக்கார அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் சிவ மோகன், விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர். அத்துடன் கிளிநொச்சி இரணைமடு குளத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனமும், விவசாயப் பெருமக்களும் இணைந்து கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் 97 பானைகளில் பொங்கி சிறப்பு வழிபாடும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் டெங்கு பாதிப்பு அதிகம்


கடந்த 15 நாட்களுக்குள் 1311 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த டெங்கு காய்ச்சலால் யாழ். மாவட்டத்திலும் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் , யாழ்மாவட்டத்தில் 126 பேரும், கொழும்பு மாவட்டத்தில் 342 பேர், கம்பஹா மாவட்டத்தில் 84 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 38 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த 15 நாட்களில் கொழும்பு மாநக ரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாத்திரம் 157 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது. மேலும், மூன்று நாட்களுக்கும் அதிகமாக காய்ச்சல் காணப்பட்டால், உடனடியாக வைத்தியரை நாடுமாறும் தொற்று நோய் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின் உற்பத்தியின் அளவு குறைவடையும் – மின்சாரசபை அதிகாரிகள்

மலையகத்தில் வரட்சி காலநிலை தொடர்ந்து சென்றால் மின் உற்பத்தி அளவு குறைவடையும் நிலை தோன்றியுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். மலையகத்தில் தொடர்ந்து நிலவிவரும் வரட்சி காலநிலையினால் காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாகலை மேல் கொத்மலை போன்ற நீர்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது.

இந்நிலையில் தொடந்தும் வரட்சி நிலை நீடித்தால் நோட்டன் விமலசுரேந்திர. லக்ஷபான. நவலக்ஷபான. கெணியன். பொல்பிட்டிய ஆகிய நீர்மின் உற்பத்தி



நிலையங்களின் மின் உற்பத்தியின் அளவு குறைவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் மின் பாவனை யாளகள் மின் பாவனையை சிக்களமாக பாவிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நோட்டன் பிரிட்ஜ் நிருபர் மு.இராமசந்திரன்

## வாகனம் தடம்புரண்டு விபத்து – 9 பேர் படுகாயம்

மட்டக்களப்பு, பெரியகல்லாறில் வாகனம் தடம்புரண்டு ஏற்பட்ட விபத்தில் 9 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த விபத்தானது மாலை பெரியகல்லாறு பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு தாளங்குடாவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்றுகொண்டிருந்த பட்டா ரக வாகனத்தின் சக்கரத்தில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக வாகனம் தடம் புரண்டு இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

தைப்பொங்கல் கொண்டாட்டத்திற்காக உறவினர்களின் வீட்டிற்குச் சென்று திரும்பியவர்களே இவ்வாறு விபத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதில் படுகாயமடைந்தவர்கள் பெரியகல்லாறு மாவட்ட வைத்தியசாலை மற்றும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மன்னார் மாவட்டத்தில் திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள்

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலையினால் நடாத்தப்பட்ட திணைக்களங்களுகிடையிலான விளை யாட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வும் பரிசில்கள் வழங்கும் வைபவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15.01.2017) மாலை 4 மணியளவில் மன்னார் நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக வணிக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன், குழுக்களின் பிரதித்தலைவர் அ.அடைக்கலநாதன் வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் ஆகி யோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த போட்டி திணைக்களங்களுக்கு இடையில் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட் ஆகிய விளை யாட்டுக்கள் என நடைபெற்றது. இவ் இறுதிப் போட்டிகளில் உதைபந்தாட்ட



போட்டியில் கல்வித் திணைக்கள அணி யும் விவசாய திணைக்கள அணியும் மோதி கல்வித்திணைக்கள அணி வெற்றி பெற்றது. மென்பந்து கிரிக்கெட் போட்டியில் மடு பிரதேச செயலக அணியும் முசலி பிரதேச செயலக அணியும் மோதி மடு பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. கரப்பந்து (Over Game) போட்டியில் தபால் திணைக்கள அணியும் நானாட்டன் பிரதேச செயலக அணியும் மோதி தபால் திணைக்கள அணி வெற்றி பெற்றது. கரப்பந்து (Setup Game) போட்டியில் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அணியும் இலங்கை போக்குவரத்து சபை அணியும் மோதி இலங்கை போக்குவரத்து சபை அணி வெற்றியீட்டியதுடன் அவர்களுக்கான கேடயங்களும் பரிசில் களும் வழங்கிவைக்கப்பட்டது.






## ராகவா லோரன்சுக்கு தொடரும் சோதனை



நடிகர் ராகவா லோரன்ஸ் தன்னை எப்போதும் பிரச்சினைகளில் சிக்காமல் பார்த்துக்கொள்பவர். படங்களில் நடிப்பது, தயாரிப்பது, நடனம் அமைப்பது என பிசியாக இருக்கும் அவருக்கு சில சோதனைகளும் இருக்கிறது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மொட்ட சிவா கெட்ட சிவா படம் தலைமறைவாகி சிறையில் இருக்கும் தயாரிப்பாளர் மதனால் சிக்கலாக மாறியது. பின் வாசு இயக்கத்தில் சிவலிங்கா படத்தில் முழு கவனம் செலுத்தி வந்தார். படத்தை பொங்கலுக்கு வெளியிட முடிவெடுத்தும் 100 தியேட்டர்கள் கூட கிடைக்கவில்லையாம். இதனால் ஜனவரியில் வெளியிடலாம் என்றால் சிங்கம் 3 படத்திற்கு மட்டும் அதிக தியேட்டர் கிடைத்துள்ளதாம். இதனால் படத்தை அடுத்தமாதம் பெப்ரவரியில் வெளியிட முடிவு செய்துள்ளார்களாம்.

## மணிரத்னத்தையே மறுத்துப் பேசிய சிறுமி



இயக்குனர் மணிரத்னம் அழகான காதல் கதைகளை சினிமா மூலம் வெளிச்சமிட்டுக் காட்டியவர். பல முன்னணி ஹீரோக்களை வைத்து ஹிட் படங்களைக் கொடுத்துள்ளார். நடிகர் பார்த்திபன் சமீபத்தில் தன் கோடிட்ட இடங்கள் நிரப்புக படத்திற்காக ஊடகத்தில் பேட்டி கொடுத்துள்ளார். பல விஷயங்களை பகிர்ந்துகொண்ட அவர் தன் மகள் கீர்த்தனா பற்றியும் பேசினார். இவர் வேறு யாருமல்ல. மணிரத்னம் இயக்கிய கன்னத்தில் முத்தமிட்டால் படத்தில் சிறப்பாக நடித்தவர் தான் கீர்த்தனா. தற்போது அவர் அந்த இயக்குனரிடம் காற்று வெளியிடை படத்தில் உதவி இயக்குனராக பணியாற்றி வருகிறாராம். மணிரத்னம் அவரிடம் எனது இரண்டு படங்களில் நீ ஹீரோயினாக நடிக்கலாமே என்று கேட்டதற்கு அப்பெண் நான் உங்களின் கீழ் வேலை செய்யும் ஆளாக இருக்கக்கூடாது. உங்களை போல வரவேண்டும் என கூறி அதிர்ச்சி கொடுத்தாராம். இதை நடிகர் பார்த்திபன் மகிழ்ச்சியுடன் கூறினார்.

## காதலிக்க ஆரம்பித்திருக்கிறேன் - விஜய் சேதுபதி



தமிழ் சினிமாவில் கமர்ஷியல் பாணியில் சிக்காமல் வித்தியாசமான கெட்டப்பில் தொடர்ந்து நடித்து வருபவர் விஜய் சேதுபதி. ஒவ்வொரு படத்துக்கும் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்கும் இவர் ஜல்லிக்கட்டு போன்ற சமூக விஷயங்களுக்கும் குரல் கொடுப்பவர். இவரிடம் சமீபத்திய பேட்டியொன்றில், நீங்கள் சினிமாவை எந்தளவு காதலிக்கிறீர்கள் என்று கேட்கப்பட்டபோது, ஆரம்பத்தில் வருமானத்துக்காக ஒரு தொழிலாகவே சினிமாவைப் பார்த்தேன். தற்போது தான் கொஞ்சம் கொஞ்சமாக காதலிக்க தொடங்கியுள்ளேன் என்று கூறியுள்ளார். மேலும் தான் டிவிட்டரில் இல்லை என்றும் தெரிவித்தார்.

## இரட்டிப்பு மகிழ்ச்சியில் கீர்த்தி சுரேஷ்



கீர்த்தி சுரேஷ் தான் இன்று தமிழ் சினிமாவின் முன்னணி நடிகை. விஜயைத் தொடர்ந்து சூர்யாவிற்கு ஜோடியாக ஒரு படத்தில் நடித்து வருகின்றார். இந்நிலையில் இவருக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியை இந்த பொங்கல் கொடுத்துள்ளது. ஆம், பைரவா படத்தின் பிரமாண்ட ரிலீஸ். இது மட்டுமன்றி, ரெமோ படம் 100வது நாளைக் கடக்கின்றது. இவை இரண்டிற்கும் நன்றி செலுத்தியது மட்டுமல்லாமல், அனைவருக்கும் தன் பொங்கல் வாழ்த்தையும் கூறியுள்ளார்.

## தனுஷுடன் மீண்டும் இணையும் அனிருத்



பாலாஜி மோகன் இயக்கத்தில் தனுஷ், ரோபோ ஷங்கர், காஜல் அகர்வால் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியாகி வசூல் ரீதியாக வெற்றிபெற்ற படம் மாரி. இப்படத்தில் தனுஷின் தோற்றம் மற்றும் உடைகள் படம் வெளியான சமயத்தில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டது. அதைதொடர்ந்து இப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகவுள்ளது. முதல் பாகத்தில் பணியாற்றிய எல்லோரும் இதிலும் பணியாற்றவுள்ளனர். அதேபோல் தனுஷுடன் கொஞ்ச நாட்களாக சேராமல் இருக்கும் அனிருத், இந்த படத்தின் மூலம் அவருடன் இணையவேண்டும் என்பதே ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. இதுகுறித்து பேசிய அனிருத், தனுஷும் நானும் தொடர்ந்து பணியாற்றினால் போர் அடித்துவிடும் என நாங்கள் ஒன்றாக சேர்ந்து எடுத்த முடிவு இது. கொஞ்சம் இடைவெளிவிட்டு நாங்கள் இணைவோம் என்றார்

## ரசிகர்களை கோபத்திற்கு ஆளாக்கிய கௌதமி



கௌதமி சில மாதங்களாக பல சர்ச்சைகளில் சிக்கி வருகிறார். இந்நிலையில் சமீபத்தில் ஒரு வானொலியில் மைக்கை தூக்கி எறிந்து சண்டைப்போட்டு வெளியே வந்தார். அதில் விளம்பரத்திற்காகதான் கமலை பிரிந்தீர்களா? மோடிக்கு லெட்டர் எழுதினீர்களா? என்பதுபோல் கேள்வி எழுப்பினார்கள். உடனே கோபமாக வெளியேறினார். ஆனால், அதெல்லாம் ட்ராமா தானாம். கௌதமி இந்த அந்த வானொலியில் ஒரு நிகழ்ச்சியை நடத்த விருக்கின்றாராம். அதற்கான விளம்பரம் தான் இது என தெரியவர ரசிகர்கள் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டனர்.

## ரசிகர்களை கோபத்திற்கு ஆளாக்கிய சன்னி லியோன்



சன்னி லியோன் இவரை இந்தியாவில் தெரியாதவர்கள் யாரும் இல்லை. இவர் தமிழில் கூட வடகறி என்ற படத்தில் ஒரு பாடலில் நடனமாடியுள்ளார். இந்நிலையில் இவர் PETAவின் விளம்பர தூதராக இருப்பது அனைவரும் அறிந்ததே. இவருக்கு சமீபத்தில் PETA இந்த வருடம் ஒரு விருது கொடுத்துள்ளது. இவரை PETAவின் சிறந்த விளம்பர தூதர் என்று தேர்ந்தெடுத்துள்ளனர். இதற்கு அவர் நன்றி தெரிவிக்க, தமிழகத்தை சார்ந்தோர் பலர் தங்கள் கோபங்களை பதிவுசெய்து வருகின்றனர். ஏனெனில் ஜல்லிக்கட்டை ஆரம்பத்திலிருந்து PETA தான் எதிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நடிகர் சங்கம் கவலையுடன் வெளியிட்ட அறிக்கை

த்ரிஷா தற்போது கர்ஜனை என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு காரைக்குடியில் தொடங்கியது. ஆனால், இவர் PETAவின் விளம்பர தூதர் என்பதால் பலரும் த்ரிஷா மன்னிப்பு கேட்கவேண்டும், இல்லையெனில் படப்பிடிப்பை நடத்த அனுமதிக்கமாட்டோம் என கூறினார்கள். இதற்கு நடிகர் சங்கம் தரப்பில் 'இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மொழியினருக்கும் ஒவ்வொரு கலாச்சார அடையாளம் இருக்கிறது. இதையெல்லாம் அழியாமல் காக்கப்பட வேண்டும் என்பதில் தென்னிந்திய நடிகர் சங்கம் முழுமையாக நம்புகிறது.

அந்த வகையில் சிந்துவெளி நாகரிகம் கல்வெட்டில் இருந்து இன்றுவரை ஏறு தழுவுதல் என்கின்ற ஜல்லிக்கட்டு தமிழர்களின் தொன்மை அடையாளமாய் இருந்து வருகின்றது. சட்டத்திற்கு முன் ஜல்லிக்கட்டு பற்றி வேறு பார்வை இருக்கின்றது. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதைச் சட்டத்திற்கு புரியவைத்து நம்மொழி சார்ந்த கலாச்சாரங்களை வாழவைப்பது அவர்களுடைய கடமையாகிறது. கடவுள், மதம், வாழ்க்கை, பொருளாதாரம், கலாச்சாரம், அரசியல் இப்படி எல்லாவற்றுக்கும் தன் தனிப்பட்ட கருத்தை பதிவு செய்ய நம் அனைவருக்கும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் உரிமை வழங்கியுள்ளது. அந்த வகையில் சமீபத்தில் தனது கருத்தை பதிவுசெய்த சில நடிகர், நடிகையிடம் படப்பிடிப்பில் சிலர் எல்லை மீறி அவமரியாதை செய்தது வருந்தத்தக்கது.

இந்த நேரத்தில் நம் கலைஞன் கமலஹாசன் தனது வலைபக்கத்தில் பதிவிட்ட ஒரு பதிவை இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அதில் தங்களது தனிப்பட்ட கருத்துக்களை பதிவு செய்பவர்களை எல்லை மீறாமல் விமர்சிக்க வேண்டியதும், அதுவும் பெண்ணாக இருந்தால் கொச்சைப்படுத்தாமல் பதில் விமர்சனம் செய்வதும் கூட தமிழர் மரபு தான் என்று குறிப்பிட்டு இருக்கிறார். தமிழர்களின் மரபு சார்ந்த ஏறு தழுவல் அவர்களின் உணர்வுகளையும், உள் எழுச்சிகளையும் புரிந்துகொண்டு அது எல்லை மீறுவதற்கு முன் மத்திய அரசு அவசர சட்டம் ஏற்றியேனும், இந்த வருடம் ஏறு தழுவலை நடத்தி கொடுக்கவேண்டும், என நாங்கள் வேண்டுகிறோம். இதுவே தமிழக மக்களுக்கு தரும் பொங்கல் பரிசாக இருக்கும் என்றும் நம்புகிறோம். அதற்காக காத்திருக்கிறோம்' என்ற நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

## இமாலய இலக்கை எட்டிய தங்கல்



தங்கல் படம் இந்தியா முழுவதுமே மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. இப்படத்தின் வசூல் இத்தனை நாட்கள் ஆகியும் குறைந்தபாடில்லை. இந்நிலையில் இப்படம் உலகம் முழுவதும வந்த வசூலில் ரூ.700 கோடியை தாண்டியுள்ளது. இதில் இந்தியாவில் Net அடிப்படையில் ரூ.365 கோடி வசூல் செய்ய, Gross ரூ.513 கோடி வர, வெளிநாடுகளில் ரூ.192 கோடி வசூல் செய்துள்ளது. இதன் மூலம் இரண்டு முறை ரூ.700 கோடி கிளப்பில் இணைந்த ஒரே நடிகர் என்ற சிறப்பை அமீர் கான் பெற்றுள்ளார்.

ஒஸ்கர் நாயகன் ஏ.ஆர்.ரகுமான் இசையில் சூப்பர்ஹிட் பாடலான 'ஊர்வசி ஊர்வசி' பாடல் வரிகளில் மாற்றும் செய்து வெளியிட்டுள்ள 'ஊர்வசி ஊர்வசி - 2' பாடல் இணையதளத்தில் வைரலாகி வருகிறது. கடந்த 1990ஆம் ஆண்டு ஏ.ஆர்.ரகுமான் இசையில் உருவான 'ஊர்வசி ஊர்வசி' பாடல் வரிகளில் சில மாற்றம் செய்து புதிய சுவாரஸ்ய வரிகளுடன் மீண்டும் பாடலை வெளியிட்டுள்ளார். புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பாடல் வரிகளில், 'டொனால்ட் டிரம்ப் அதிபரானாலும் டேக் இட் ஈசி பாலிசி. ஐநூறு ருபா செல்லா போனால் டேக் இட் ஈசி பாலிசி' போன்ற வரிகள் இடம்பெற்றுள்ளன. 'டேக் இட் ஈசி'-ஊர்வசி பாடலை புதுப் பரிமாணத்துடன் தனது ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கங்களில் ஏ.ஆர்.ரகுமான் பகிர்ந்துள்ளார். இந்தப் பாடல் இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

விக்கிலீக்ஸால் சமீபத்தில் வெளியிடப்பட்ட இரகசிய ஆவணம் ஒன்று. ஆட்சிமாற்றத்திற்கானசெயலூக்கமான அமெரிக்க திட்டமிடல். தறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்காவது சிரிய உள்நாட்டு போர் வெடிப்பில் சூறையாட இருந்ததை நிறுவிக்காட்டியது. டமாஸ்கஸில்உள்ளஅமெரிக்கதூதரக தலைமையகத்திலிருந்து வந்திருந்த அந்த இரகசிய செய்தி. வோஷிங்டன் பாவித்துக்கொள்ளத்தகுந்த சிரிய அரசாங்கத்தின் "பலவீனங்களை" விவரித்திருந்தது.

"எல்லைகடந்துவரும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் பிரசன்னத்தை" ஆதாயமாக்கி. வகுப்புவாத மோதலை ஏற்படுத்த. "ஈரானிய மேலாதிக்கம் குறித்து சுன்னி பிரிவினரிடையே அச்சங்களைத்" தூண்டிவிடுவதே அப்பட்டியலில் முதலில் இடம் பெற்றிருந்தது.

அமெரிக்க படையெடுப்பு மற்றும் வோஷிங்டனின் பிரித்தாளும் தந்திரங்களால் உருவாக்கப்பட்டிருந்த ஈராக்கின் வகுப்புவாத படுகொலைகளின் உச்சத்தில் 2006இல் அந்த ஆவணம் எழுதப்பட்டிருந்த நிலையில். அத்தகைய பரிந்துரைகள் ஒரு இரத்த ஆறை ஓடச் செய்யுமென்பதை முழுமையாக அறிந்தே முன் வைக்கப்பட்டது.

அண்மித்தளவிற்கு ஒரு தசாப்தத்திற்குப் பின்னர். இக்கொள்கையின் கோரமான விளைபயன்களில் சுமார் 300.000 சிரியர்களின் மரணங்களும். கூடுதலாக 4 மில்லியன் பேர் அந்நாட்டை விட்டு விரட்டப்பட்டமையும் மற்றும் 7 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் உள்நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்த்தப்பட்டமையும் உள்ளடங்குகின்றன.

அமெரிக்க இராணுவவாதத்தின் தீவிரப்பாட்டை நியாயப்படுத்த. எரிச்சலூட்டும்விதமாக சிரிய மக்களின் துன்பங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற நிலையில். வோஷிங்டன் அந்த எண்ணெய் வளம்மிக்க மத்திய கிழக்கின் மீதும் ஒட்டுமொத்த பூமியின் மீதும் அதன் மேலாதிக்கத்தை திணிக்கும் அதன் முனைவை ரஷ்யா தடம் புரள செய்யவிட்டுவிடாது.

ரஷ்யாவுடனான போருக்கு இட்டுச்செல்லும் பாதை எவ்விதத்திலும் தற்செயலானதல்ல. டமாஸ்கஸில் ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவருவதற்கான அமெரிக்க தலையீடு. ஆரம்பத்திலிருந்தே. சிரிய அரசாங்கத்தின் பிரதான கூட்டாளிகளான ஈரான் மற்றும் ரஷ்யாவைநேரடியாகதாக்குவதற்கான தயாரிப்புடன். அவ்விரு நாடுகளையும் பலவீனப்படுத்துவதை நோக்கமாக கொண்டிருந்தது.

ஒவ்வொருநாளும் மேலும் மேலும். அமெரிக்க மற்றும் உலக முதலாளித்துவத்தின் வரலாற்று நெருக்கடியில் வேரூன்றிய அமெரிக்க இராணுவவாதத்தின் வெடிப்பு, ஓர் அணுஆயுத மூன்றாம் உலகப்போரின் பேராபத்துடன் மனிதயினத்தை எதிர்கொள்கிறது.

# மாரடைப்பு நோய் ஏற்பட இவை தான் காரணமா?



நன்றாக இருக்கும் ஒருவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைவது தற்போது இயல்பாகி வருகிறது.

மாரடைப்பு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு. பல்வேறு காரணங்கள் இருந்தாலும். அதற்கு நம்முடைய சில மோசமான வாழ்வியல் முறைகளும் காரணமாக உள்ளது.

மாரடைப்பு ஏற்படுவதற்கு வாழ்வியல் முறை காரணங்கள்

உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களின் இதயத்துக்குச் செல்லும் கரோனரி ரத்தக் குழாய்கள் தடித்து வீங்குவதால். இதயத்துக்கு ரத்தம் செல்வது கொஞ்சம் கொஞ்சமாகத் தடைப்படுகிறது. இதனால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுகிறது.

ஒருவரின் அதிகப்படியான உடல் பருமன். மாரடைப்பு ஏற்படுவதற்கு முக்கியமான மறைமுகக் காரணியாகும். ஏனெனில் உடல் பருமன் அதிகமாக இருப்பவர்களுக்கு சர்க்கரை நோய் எளிதில் தாக்கும். எனவே சர்க்கரை நோய். உடல் பருமன் இரண்டும் ஒன்று சேர்வதால். கரோனரி ரத்தக் குழாய்கள் வீங்கி. மாரடைப்பு பிரச்சினையை ஏற்படுத்துகிறது.

ஒருவரின் உடலில் கொலஸ்ட்ரால் அதிகமாக இருந்தால். அவை இதயத்துக்குச் செல்லும் ரத்தக் குழாய்களில் படிந்து. ரத்த ஓட்டத்தைத் தடை செய்கிறது. எனவே இதன் காரணமாக மாரடைப்பு ஏற்படுகிறது.

சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டு. சர்க்கரை நோய் கட்டுக்குள் இல்லாத சமயத்தில். ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருக்கும். இதனால். ரத்தக் குழாய்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு. சீரான முறையில் இதயத்திற்கு ரத்தம் செல்வது தடுக்கப்படுவதால். மாரடைப்பு ஏற்படுகிறது.

தினமும் ஒருவர் புகைப்பிடிப்பதால். புகையிலையில் உள்ள நிக்கோடின் மற்றும் சில வேதிப்பொருட்கள் நுரையீரலில் படிந்து. நுரையீரலின் செயல்திறனைக் குறைக்கிறது. இதனால் ரத்தக் குழாய்களில் அந்த வேதிப்பொருட்கள் படிந்து அடைப்பை உண்டாக்குவதால். மாரடைப்பு பிரச்சினை ஏற்படுகிறது.

குழந்தைக்கு ஜூஸ் செய்து கொடுக்கும்போது. அதில் சர்க்கரை சேர்ப்பதைத் தவிர்த்து. தேன் சேர்த்து கொடுக்கவேண்டும். ஏனெனில் சர்க்கரை பற்களை சொத்தையாக்கி. ஈறுகளை சேதப்படுத்தும்.

வெள்ளை உணவு வகைகளான சாதம். வெள்ளை பிரட். பாஸ்தா போன்றவை ஈறு நோய்களையும். சொத்தைப் பற்களையும் ஏற்படுத்தும். ஏனெனில் இந்த உணவுகளை சாப்பிடும்போது, அவை பற்களின் இடையில். சிக்கிக்கொண்டு. பல் சொத்தை மற்றும் ஈறு நோய்களை ஏற்படுத்துகிறது.

உலர் திராட்சையானது. குழந்தைகளின் பற்களில் சிக்கி. சொத்தைப் பற்களை உண்டாக்கும். எனவே உலர் திராட்சையை அளவுக்கு அதிகமாக குழந்தைகளுக்குக் கொடுப்பதை தவிர்க்கவேண்டும். சோடாவில் உள்ள அமிலம். குழந்தைகளின் பற்களைப் பாதித்து. பற்களின் எனாமலை அரித்து. சொத்தைப் பற்கள் ஏற்படும் வாய்ப்பை ஏற்படுத்தி. குழந்தைகளின் உடல் பருமனை அதிகரிக்கச் செய்கிறது.



# முல்லை மாவட்டத்தை மது பாவனையிலிருந்து மீட்டெடுப்பேன் – வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சவால்

கடந்த 09.01.2017 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் அவர்களால் 'முல்லை நகரை நரகமாக்காமல் பொருத்தமான இடத்திற்கு மதுபான சாலையை அப்புறப்படுத்துங்கள்' என்கிற பதாதைகளைத் தாங்கியவாறு 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு மதுபானசாலைக்கு எதிராக தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். முல்லை மாவட்டத்தை சிறந்த குடிபோதையற்ற மாவட்டமாக மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கும் கௌரவ வடமாகாண சபையின் உறுப்பினர் ரவிகரன் அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கும் அதேநேரம். இவ்விடயம் நடைமுறையில் சாத்தியமாகுமா? என்பதையும் சிந்திக்கவேண்டும். போதைப் பொருட்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டவர்களில் 80வீதமானவர்கள் குடிப்பழக்கம் கொண்டவர்கள் என்று கூறப்படுகிறது. அதேநேரம் இந்த மதுபான சாலையை பிறிதொரு இடத்திற்கு மாற்றுவதன் விளைவாக கஞ்சா போன்ற போதைப்பொருட்களும் இப்பிரதேசத்தில் பாவனைக்கு வரும். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இவ்வார்ப்பாட்டத்தின்போது அரச உயர் அதிகாரிகள் இலஞ்சம் பெற்றே இந்த மதுபானசாலைக்கு அனுமதி வழங்கினார்கள் என்ற கோஷம் எழுப்பப்பட்டது. அரச உயர் அதிகாரிகள் எனக் குறிப்பிடுகின்றபோது அரச அதிபர். பிரதேச செயலாளர். கணக்காளர், உட்பட்டவர்களைக் குறிப்பிடுவதாகவே அமைகின்றது. அங்கிருக்கக்கூடிய கள்ளுக்கடைக்கும். இந்த மதுக்கடைக்கும் குறிப்பிட்ட கால அவகாசமே வழங்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் பிறிதொரு இடத்திற்கு மாற்றுமாறு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலஞ்சம் பெற்றமை தொடர்பாக ஆர்ப்பாட்டத்திற்கு உள்ளும் வெளியிலும் பேசப்பட்ட விடயங்களைக்கொண்டு ஊடகங்களில் பல செய்திகள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன. முல்லை மாவட்ட அரச அதிபரைத் தவிர ஏனைய அதிகாரிகளுடனும் நாம் தொலைபேசியில் தொடர்புகொண்டு இவ் இலஞ்சம் பெற்றமை தொடர்பாக வினவியபோது. அவ்வாறு நாம் செயற்படவில்லை. அவ்வாறெனில் உண்மை நிருபிக்கப்படும் பட்சத்தில் தாம் பதவியிலிருந்து விலகவும் தயார் என எமது ஊடக நிறுவனத்திடமும் தெரிவித்திருந்தனர்.

உலக நாடுகளைப் பொறுத்தவரையில் மது ஒழிப்பு என்பது சாத்தியப்படாததொரு விடயம். ஆனால் வடமாகாணசபையின் உறுப்பினர் ரவிகரன் அவர்கள் முல்லை மாவட்டத்தில் மதுபாவனையற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவாராகவிருந்தால் அவரது பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். மது முற்றாக தடைசெய்யப்பட்ட சவுதி அரேபியாவில் கூட நட்சத்திர விடுதிகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில அரபு நாடுகளில் குறிப்பிட்ட இடங்களில் மது விற்பனை இடம்பெறுகிறது. இந்தியாவில் கோவகன் என்பவர் மதுபாவனைக்கு எதிராக பல போராட்டங்களை நடத்தியபோதிலும் அவர் சிறைவாசம் அனுபவித்த வரலாறு தான் மிச்சம். பாண்டிச்சேரி உட்பட பல மாநிலங்கள் மதுபோதையில் மிதக்கிறது. இதற்கிடையில் மதுபான சாலை குறித்த இடத்தில் தான் வேண்டும் என எவரும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. மாற்றுக்கருத்தையும் முன்வைக்கவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் அந்திசாயும் வேளையில் மதுவில் குளிப்பவர்கள் என அப்பகுதி மக்கள் சிலர் தெரிவித்தனர்.

இவ்வார்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டிருந்தமை சிறப்பம்சமாகும். அதேநேரம் இம் மதுபான சாலை முல்லையில் இருந்து பிறிதொரு இடத்திற்கு நகரும்போது அச்சூழலை சார்ந்தவர்கள் தீவிரமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலை உருவாகலாம். அல்லது அரச உயர் அதிகாரிகளே கஞ்சா போன்ற போதைப்பொருட்களை பரப்பிவிடும் சூழ்நிலையும் உருவாகலாம். இதுகுறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரிக்கையாக செயற்படவேண்டும். அப்பிரதேசத்தில் இந்த மதுச்சாலை இருக்கக்கூடாது என்று ஒட்டுமொத்த முல்லைத்தீவு மக்களும் கூறுவார்களாகவிருந்தால் நிச்சயம் இம்மதுபான சாலை அகற்றப்படவேண்டிய தேவை உள்ளது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் கூட 03இற்கும் மேற்பட்ட மதுபான சாலைகள் இருந்தது. குடிப்பழக்கத்தை அவர்களால் கூட கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.



இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் வினவிய போது. தனிப்பட்ட ரீதியில் பழிவாங்கும் நோக்கம் எனக்கு இல்லை. அப்பகுதியால் பயணிக்கும் மாணவர்கள். பொது மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். சமுதாயம் சீர்கெடும் வகையில் இம்மதுபானசாலை அமைந்துள்ளது. குடித்துவிட்டு போத்தல்களை வீதியோரங்களில் வீசிச்செல்கிறார்கள். இம்மதுபானசாலை இவ்விடத்திலிருந்து அகற்றப்படும்வரை எனது போராட்டம் தொடரும். 'விசர் நாய்கள் கடிக்கவருகிறது என்பதற்காக நான் நாயைக் கடித்துவிட முடியாது'. கருத்துத் தெரிவிப்பவர்கள் தெரிவித்துக் கொண்டேயிருப்பார்கள். எனது மக்களுக்கான சேவைகள் தொடரும். முல்லை மாவட்டத்தை மதுபோதையிலிருந்து மீட்டெடுப்பேன் என்றும் அவர் தெரிவித்தார்.

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதற்குப்பின்னரான காலகட்டத்தில் இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் 1944இல் பிரித்தானிய அரசாங்கம் சோல்பரி பிரபுவின் தலைமையில் ஆணைக் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பியது. இலங்கை அமைச்சர்களால் வரையப்பட்ட யாப்பில் காணப்பட்ட சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு 1947ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. சோல்பரி அரசியல் யாப்பின்படி இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயக முறை அறிமுகப்படுத்தப் பட்டது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகக்கொண்டு முதலாவது குடியரசு யாப்பொன்று 1972ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி கலந்துரையாடும் தீர்மானம் அனைத்து அரசியல் தலைவர்களினாலும் முன்வைக்கப்பட்டது. முதலாவது குடியரசு யாப்பின் திருத்தமாக அரசாங்கம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அறிமுகத்தோடு 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு முறை கொண்டுவரப்பட்டு அதுவே இரண்டாவது குடியரசு யாப்பாக கொள்ளப் பட்டது.

அடிப்படை உரிமைகள், நீதித்துறை எனப் பலவற்றை உள்ளடக்கிய விரிவான முறையில் இவ்வரசியல் யாப்பு தற்போது வரையில் 19 தடவைகள் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஆறாவது, பதின்மூன்றாவது, பதினேழாவது, பதினெட்டாவது மற்றும் பத்தொன்பதாவது திருத்தங்கள் அரசியல் முக்கியத்துவத்தினை பெற்று நிற்கின்றன.

2000ஆம் ஆண்டு அரசியலமைப்பு திருத்த யோசனை பாராளுமன்றில் வரைபாக முன்வைக்கப்பட்டபோதும் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறமுடியாது தோல்வியைக் கண்டது. இந்நிலையில் 1972, 1978ஆகிய குடியரசு யாப்புக்களில் தமிழ் மற்றும் தமிழ் பேசும் சிறுபான்மை தேசிய இனங்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டிருந்தன.

2015 ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியன ஒன்றிணைந்து அமைத்த தேசிய அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் இலங்கை புதிய அரசியலமைப்பு ஒன்றினை இயற்றும் பணிகள் அனைத்து தரப்பினரின் பங்கேற்புடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## ஏகமனதாக நிறைவேறிய பிரேரணை

அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான பிரேரணையொன்று ஜனவரி ஒன்பதாம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டது. குறித்த பிரேரணையில் இலங்கைக்கு அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுகின்றது என்பது குறிப்பிடப்பட்டு 23வாசகங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

முதலாம், இரண்டாம் வாசகங்களில், இலங்கையின் அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதன் பின்னர் அரசியலமைப்புச் சபை என அழைக்கப்படும். எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இந்தச் சபை தீர்மானிக்கின்றது. பாராளுமன்றத்தின் சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவு செய்யப்படவேண்டும். சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. மிக முக்கியமாக 5ஆவது வாசகத்தில், அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற இருபத்தொரு பேரை விஞ்சாத எண்ணிக்கையாகக்கொண்டதும் அவர்களில் ஒருவர் தவிசாளராகவும் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு. வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புக்களை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள். ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு பேரை விஞ்சாத வாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரம் குறித்த தீர்மானத்தில் அரசியலமைப்பு வரைபு நிறைவேற்றப்படும் முறைமை மற்றும் உருவாக்கப்பட்ட குழுக்கள் கலைக்கப்படுதல் தொடர்பிலும் 20ஆம் 21ஆம் 22ஆம் 23ஆம் வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 20 ஆவது வாசகத்தில், அரசியலமைப்பு சபையினால் சாதாரண பெரும்பான்மையினால் மாத்திரம் அரசியலமைப்பு சட்டமூலத்தில் உள்ள பிரேரணைகள் அங்கீகரிக்கப்படுமிடத்து, பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படல் வேண்டுமென்பதுடன் அறிக்கையையும் அரசியலமைப்பு சட்டமூலத்தையும் ஒரு மாதத்திற்குள் சமுகமளிக்காத உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக முழுப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பு சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் இதற்குப் பின்னர் இதன் 21 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் என்பதுடன் அரசியலமைப்பு சபை மற்றும் பிரேரணையை முன்வைத்த குழு கலைந்ததாக கருதுதல்வேண்டும்.

21 ஆவது வாசகத்தில், அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைபு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கை மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். 22ஆவது வாசகத்தில், அரசியலமைப்புச் சபை மற்றும் 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உபகுழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பில் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும். இறுதியாக 23ஆவது வாசகத்தில், சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சமூகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றிரண்டு பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைபடுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம் அரசியலமைப்பு சட்ட மூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பிரேரணையானது மார்ச் மாதம் 09ஆம் திகதி வாக்கெடுப்பின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## வழிநடத்தும் குழு


அதனையடுத்து அரசியலமைப்பு சபையை நியமிப்பதற்கான கட்டமைப்பு தீர்மானத்தின் 05 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசியலமைப்பு சபையின் முதலாவது அமர்வு 2016 ஏப்ரல் 05ஆம் திகதி நடைபெற்றபோது அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவுக்கான 21 அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டனர். வழிப்படுத்தும் குழுவுக்கு தலைவராக பிரதமர் ரணில் விக்ரமசிங்க நியமிக்கப்பட்டார். அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, நிமல் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம், கலாநிதி.விஜேதாஸ ராஜபக்ஷ, ஏ.டீ.சுசில் பிரேமஜயந்த, ரிஷாட் பதியுதீன், பாட்டலி சம்பிக ரணவக்க, டி.எம். சுவாமிநாதன், மனோ கணேசன், மலிக் சமரவிக்ரம, இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, ஆகியோரும் எதிர்க்கட்சித்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன், ஜே.வி.பி.தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன, எம்.ஏ. சுமந்திரன், டாக்டர் திருமதி துஷிதா விஜேமான்ன, பிமல் ரத்நாயக்க, பிரசன்ன ரணதுங்க, டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

## வழிநடத்தல் குழுவின் அடிப்படை குறிப்புக்கள்

சிலோன் அரசியலமைப்பு ஆணைக்குழு ஆணை (1946 சோல்பரி அரசியல்யாப்பு), 1972இல் இயற்றப்பட்ட முதலாவது குடியரசு யாப்பு, 1978ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இரண்டாவது குடியரசு யாப்பு, 2000ஆம் ஆண்டின் அரசியலமைப்பு வரைபு, புதிய அரசியலமைப்பினை அடிப்படை ரீதியில் வடிவமைக்க அனைத்து கட்சி பிரதிநிதித்துவ குழுவின் பிரேரணைகள் ஆகியவற்றை அடிப்படை குறிப்பு பொருளாக வழிநடத்தல் குழு எடுத்துள்ளதோடு அடிப்படை உரிமைகள் மீதான புதிய அத்தியாயங்கள் தொடர்பான குழு அறிக்கை மற்றும் மக்கள் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு பொது பிரதிநிதித்துவ குழு அறிக்கை ஆகியவை தொடர்பாகவும் ஆழமான கவனம் செலுத்துகின்றது.

## நேரடியாகக் கையாளப்படும் விடயங்கள்

புதிய அரசியலமைப்பின் கணிசமான பல்வேறு அம்சங்களில், சிறந்த ஆய்வுகளை மேற்கொள்ளல், திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றினை பரிசீலித்து திருத்தியமைத்தல், அரசியலமைப்பு பிரேரணை வரைபு செய்தல் ஆகிய பணிகளை வழிநடத்தும் குழு மேற்கொள்கின்றது. தற்போதய அரசியல் யாப்பின் முதலாவது மற்றும் இரண்டாவது அத்தியாயம் தொடர்பில் கலந்துரையாடல், நாட்டின் தன்மை, இறையாண்மை, மதம், அரசாங்கத்தின் கட்டமைப்பு, தேர்தல் சீர்திருத்தங்கள், அதிகாரப் பகிர்வுக்கான கோட்பாடுகள், காணி ஆகிய தலைப்புக்களின் கீழான கலந்துரையாடல்களை மேற்கொண்டு தீர்மானம் மேற்கொள்வதென வழிப்படுத்தல் குழுவினரால் தன்னகத்தே தீர்மானிக்கப்பட்டுள்ளது.



குறிப்பிட்டதும் அதில் உள் அலகுகள் பற்றிய விபரங்கள் காணப்படாமையும் நோர்வேயினருக்கு சந்தேகங்களை ஏற்படுத்தியது. அதாவது அரசியல் தீர்வை நோக்கிய பயணம் என்பதை விட சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கான அரசியல் சூழ்ச்சி என எண்ணினார்கள். ஏதாவது ஒரு புள்ளியில் இவை தோல்வி அடைந்தால் தம்மீது பழி விழாமல் காத்துக்கொள்வதற்கான தந்திரமே எனவும் கருதினார்கள். அவ்வாறு தோல்வி அடைந்தால் மாவீரர் தின உரையில் தெரிவித்தவாறு பிரிவினையை நோக்கிய நியாயங்களாக இத்தோல்விகள் மாற்றம் பெறும். பல்வேறு அளித்தது. ஏனெனில் பிரிவினைக் கோரிக்கை இல்லாதது அவர்களுக்கு அது ஓர் வெற்றியாக அதாவது பேச்சுவார்த்தைகளின் வெற்றி எனக் கருதினார்கள். இதன் காரணமாகவே சமஷ்டி அடிப்படையில் பேசித் தீர்க்கத் தயாரானார்கள். இருப்பினும் சமஷ்டித் தீர்வை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்கச் செய்வது மிகவும் சிக்கலாக உள்ளது போலவே புலிகளுக்கும் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை எட்டுவது பிரச்சினையாகக் காணப்பட்டது. இதனால்தான் இரு தரப்பார் மத்தியிலும் நம்பிக்கை காத்திரமானதாக இருக்கவில்லை.

சமாதானச் செயலகத்தின் செயலாளராக இருந்த முன்னாள் ராஜதந்திரி

# பிரபாகரன் ஈழத்தைத் தவிர எதையும் ஏற்கப்போவதில்லை என்பதே எனது அனுபவமாக இருந்தது - சந்திரிக்கா

கடந்தவாரத் தொடர்ச்சி...

என்ற கேள்வி எழுந்த நிலையில் தற்போதைய நவீன உலகில் காணப்படும் மாற்றங்கள் பற்றிய கருத்துக்கள் எழுந்தன. சுயாட்சி வைத்து சமஷ்டிக் கட்டமைப்பிற்குள் மட்டுமே சாத்தியமாகும். சுயாட்சி கூட்டாட்சி என்ற அடிப்படையிலான அரசுக் கட்டுமானமே தமது இலக்கு என புலிகளின் அரசியல் கொள்கை வகுப்பாளர்கள் விபரிக்கத் தயாரானார்கள்.

ஒஸ்லோ பிரகடனத்தில் காணப்பட்ட வாசகங்கள் சமஷ்டி பற்றி மட்டுமே சந்தேகங்களுக்கு மத்தியிலும் விடுதலைப்புலிகள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கத் தயார் என ஏற்றுக்கொண்டது அரசு மட்டத்தில் ஓரளவு நிம்மதியை பேர்னார்ட் குணதிலக அவர்களின் கருத்துப்படி புலிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எதிர்காலம் குறித்து அரசுடன் உடன்பாட்டிற்குச் செல்வதில் அதிக அக்கறை கொள்ளவில்லை.

தொடரும்...

# பொன்மொழிகள்

இருதயம் விரிவடைந்துள்ள இடத்தில்தான் உண்மை ஞானம் உதிக்கும். அந்த உண்மை ஞானம்தான் நம்பிக்கை.

அடக்கப்படாமல் உள்ள மனமும், அற வழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச்சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.

காமம், பொன்னாசை இவைக ளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட் படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன்.

அன்பு நெறியிற்சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக்கூறும் முறை மதம் எனப்படும்.

கோழைகளே பாவ காரியங்களைப் புரிந்திடுவர். தைரியமுடையோர் ஒருக்காலும் பாவம் செய்யார்.

பலமற்ற மூளையில் நாம் எதையுமே செய்ய இயலாது. அதனால் நாம் அதைப் பலப்படுத்தவேண்டும்.

அச்சமே நமக்குத் துயரத்தைத் தருவது. அச்சமே கேட்டை விளைவிப்பது. அச்சமே மரணத்தைத் தருவது. நமது உண்மை இயல்பை நாம் அறிந்துகொள்ளாமல் இருப்பதனால்தான் நமக்கு அச்சம்



ஏற்படுகின்றது. இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக் கொண்டால், எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவேவரும்.

அன்புடையவனே வாழ்பவன். சுயநலமுடையவனோ செத்துக் கொண்டி ருக்கின்றான் என்றே பொருள்.

சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமையாகும்.

எந்த வேலையாக இருந்தாலும் அதைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளியாவான்.

தன்னை அடக்கப்பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் சிக்கமாட்டான். அத்தகைய தகுதி உள்ளவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன். பலமே வாழ்வு, பலவீ னமே மரணம்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவ்வ மூன்றும் வெற்றிக்கு இன்றி யமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

ஆயிரம் தடவை யோசித்து முடிவெடுப்பதை விட எடுக்க முடிவில் நிரந்தரமாய் இருப்பதே அழகு. நேரத்திற்கு தகுந்த மாதிரி செயற்படாதே.

திட்டமிடல் வாழ்க்கையில் அவசியமாய் இருக்கிறது, ஆனால் திட்டமிட்டபடி வாழ்வு செல்லாவிடின் வெறுப்பு ஏற்படுகிறது. உங்கள் அத்தியாவசியத் தேவைக்கு திட்டமிடுங்கள் வாழ்க்கையை திட்டமிடாதீர்கள்.

ஆயிரம் பேரின் கண்கள் உன்னை நோக்கினாலும் இரு கண்கள் மட்டுமே என்றும் உன்னை அன்பாக நோக்கும் உன்னைப் பெற்றவள், நீ அவதரிக்க காரண மாய் இருந்தவர்.

கோபம் வருகின்றபொழுது வார்த்தையின் அளவுகள் அதிகரிக்கின்றன. அன்பான வர்களைக்(அன்பானவரைக்) கூட எதிர்த்து விடுகின்றது.

கெட்டவனாக இருந்து கொண்டு நல்ல பெயர் எடுப்பதைவிட நல்லவனாய் இருந்து கெட்ட பெயர் எடுப்பது எவ்வளவோ மேல்.

கடற்கரையில் இருக்கும் கப்பலை விட கடலி னுள் இருக்கும் படகின் பெறுமதி அதிகம். அதுபோல் மனிதா நீ உருவாக்கும் பொருள் உபயோகமானால் சிறப்பு.

பெருங் கடலுக்கு எல்லை சிறிய நிலப்பரப்பு. உனக்கு எல்லை உனது பெற்றோர்.

கடல் எல்லையைத் தாண்டினால் நிலம் அழிந்துவிடும். நீ எல்லையைத் தாண்டினால் நீ அழிந்துவிடுவாய்.

தந்தையின் நம்பிக்கை இருக்கும் வரை தனயன்(மகன்) வழிதவறான்.

தாயின் அன்பு இல்லையானால் தனபதியாய்(குபேரன்) இருந்தும் பயன் இல்லை. சகோதரர் துணையிருப்பின் ஒருபோதும் தனியன்(தனித்த ஆள்) ஆகான்.

வாழ்ந்தவனுக்கு அனுபவம் பதில் சொல்லும். வாழ்பவனுக்குகாலம்பதில்சொல்லும்.வாழப் போறவனுக்கு மனம் பதில் சொல்லும்.

அன்பின் ஆழம் தெரியாத மனிதா. நீ உன் தாயின் அரவணைப்பை அறிந்திருக்க மாட்டாய்.

நட்பின் ஆழம் தெரியாத மனிதா. நீ உன் தந்தையின் பாசத்தை அறிந்திருக்க மாட்டாய். காலப்போக்கில் உன் வாழ்வே தெரியாது இருந்துவிடுவாய்.

கண்ணை மூடும்போது தூங்குகிறோம். கண்ணைத் திறக்கும்போது எழுகிறோம். அதுபோல் விழுகிறபோது எழுந்துவிடு. எழும் போது விழுவது சகஜம் அதற்காக விழுந்த படியே இருந்துவிடாதே.

குறை உடலில் இருந்தால் அதை நீ பொருட்படுத்தாதே. உள்ளத்தில் உள்ளதா முதல் அதை நிவர்த்தி செய்து விடு. நீ உன்னை நேசிப்பாய் பின் மற்றவர்கள் உன்னை நேசிப்பர்.

கனவு இல்லம் கனவாகலாம். ஆனால் இல்லம் ஒருபோதும் கனவாகி விடக்கூடாது. இமைகள் திறக்கின்றன நீ பார்ப்பதற்கு, இமைகள் மூடிவிட்டால் பார்வையை இழந்துவிடுவாய்.

உதடுகள் திறக்கின்றன மனதில் இருப்பதை வெளியிட, உதடுகள் மூடிவிட்டால் ஊமையா கிவிடுவாய்.

பிரிவுகள் ஏற்படும்போதே நீ வெளிச்சத்தை சந்திக்கிறாய் வாழ்வில்.

ஒருவன் எப்பொழுது தனக்கு ஏற்படும் தடை களையும் துன்பங்களையும் தருக்கிம் கொள்ளாமல் வாழ்கிறானோ அவனே வாழ்வில் நிறையத் தோல்விகளைச் சந்தித்தவனாவான். வெற்றி பெற்றவன் துன்பத்தையும் தடங்களையுமே வாழ்வில் கொண்டவனாக இருப்பான். பல தடவை தோற்றுவிடு நீ உன் வாழ்வை வென்று விடுவாய்.

காற்றின்றி படகுகள் அசைவதில்லை. தாயே நீ இன்றி எனக்கு முன்னேற்றம் ஏது? கடல் அலையே அசையாதிருக்கும் படகை மூழ்கடிக்காதே.

உனக்கு ஒரு பொருள் பிடித்திருந்தால் உன் பெற்றோரைத் தானே முதல் கேட்கிறாய். ஏன் நீ வளர்ந்த பிறகு அவர்களிடம் கேட்பதை விட்டு உன்வழி போகிறாய். நீயும் ஒரு நாள் பெற்றோர் ஆவாய் என்பதை மறந்து விட்டாயோ? பெற்றோரின் பெறுமதி என்ன தெரியுமா? நீ வாழும் வரை அவர்களுக்கு துன்பம் கொடுக்காது அவர்களது மரியாதையை இழக்கவிடாது காப்பது. இல்லையேல் உன் பெறுமதி உன்னைவிட்டுச் சென்றுவிடும்.

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

அவர்கள் இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்களுக்கு இடையி லான மோதல்களால் இயல்பு நிலையை இழந்தவர்களே தவிர, பாதிக்கப்பட்ட தரப்பல்ல. அத்துடன் அம்மக்கள் வேறு ஒரு நாட்டில் இருந்து சேவகம் செய்வதற்காக இங்கு குடியேற்றப்பட்டவர்கள். அவர்களது சமூக கட்டமைப்பு, அவர்களது தேவைகள் அனைத்தும் தனித்துவமானவை எனவே அவர்களால் சமஷ்டியை கோரமுடியாது. தனித்து ஒரு அலகை பெற வாய்ப்பில்லை. மக்களோடு மக்களாக கொஞ்சம் பிரத்தி யேகமான தமது அபிவிருத்திக்குரிய அரசியல் உரிமைகள் சிலவற்றையே கோர முடியும். போட்டித்தன்மை உள்ள பிரதேசவாதம் சமஷ்டியின் உறுதியற்ற தன்மையை அதிகரிக்க செய்யும். சமஷ்டி பிரிந்து போதலை ஊக்குவிக்கிறதா? என்ற கேள்வியை தொடுக்கும் போது இரு விதமான பதில்களை பெறமுடியும். ஆனால் சமஷ்டி பிரிந்து போதலையே அதிகமாக ஊக்குவிக்கின்றது என்பதே பெரும்பான்மை சமூக விஞ்ஞானத்தின் முடிவாகும்.

எனவே நீண்டகால இனமுறு களால் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு சமஷ்டி முறையிலான தீர்வை வழங்க ஒடுக்குமுறையாளர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். அது மீண்டும் ஒரு தனிநாட்டுக் கோரிக்கைகளைவலுபெறசெய்யும்என்பதே ஆட்சியாளர்களின் எதிர்பார்ப்பாகும். சமஷ்டி ஆட்சி நீடித்து நிலைபெறும் என சொல்ல முடியாது. இனகுழுமங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் நாட்டில் பேராபத்தைக்கொண்டு வந்துவிடும் என ஆட்சியாளர்களின் எச்சரிக்கையாகும்.

இலங்கை அரசு தமிழருக்கு என்று சில விசேட அதிகாரங்களை பகிர்வதோடு தனது புதிய அரசியல் யாப்பை நிறுத்திக்கொள்ளும். குறிப்பாக இன்றைய 13ம் திருத்தம் போல இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். இதனை விடுத்து சமஷ்டியை பெற்றுவிடலாம் என தமிழ் தேசிய கூட்டமைப்போ அல்லது தமிழ் மக்களோ நினைத்தால் அது எதிர்காலத்தில் ஏமாற்றமாகவே இருக்கும். இன்று தமிழர்கள் அனைத்தையும் இழந்துவிட்டனர். பேரம் பேசும் வாய்ப்புகள் எவையும் இல்லை. அந்த எதிர்கால ஏமாற்றங்களை இன்று தவிர்க்க பழகிக்கொண்டால் எதிர்கால வாழ்வு இலங்கையில் உள்ள இனங்களை ஐக்கியப்படுத்தும். தமிழீழமும் சமஷ்டியும் ஆட்சியாளர்களை பொறுத்தவரை ஒன்றுதான் என்பதே அவர்களின் நிலைப்பாடு. மாறாக தமிழர்களுக்கு தீர்வு சமஷ்டி தான் எனும் மாயையை தமிழ் தலைமைகள் தோற்றுவித்தால் ஏனைய சமூகங்களும் தமிழர்களை ஒதுக்க வேண்டிய நிலையே ஏற்படும். அது மீண்டும் இலங்கையில் பல்லின சமூகங்களுக்கு இடையே அச்சத்தையும் எதிர்கால இருப்பையும் கேள்விக்குறியாக்கிவிடும் என்பதே உண்மை. இலங்கையில் சமஷ்டி இல்லையேல் தமிழ் இனம் ஆயுதம் ஏந்திப்போராடுவதை விட வேறு வழியில்லை.

## மூளையில் ஏற்படும் கட்டிகளை அழிக்கும் பக்டீரியா

Salmonella என்பது ஒரு வகை பக்டீரியா இனமாகும். இவ் பக்டீரியாக்கள் பொதுவாக மனிதர்களில் காய்ச்சல்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருப்பதாகவும், உணவுகள் நஞ்சூட்டப்படுவதற்கு காரண மாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. எனினும் முதன் முறையாக இதனை மருத்துவத்தில் பயன்படுத்த முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. அதாவது மூளைக் கட்டிகளை குணப்படுத்தும் ஆற்றல் இதற்கு இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கட்டிகளை தமது உணவாக உட்கொள்வதன் மூலம் அவற்றினை அழிக்கக்கூடியன என



தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர புற்றுநோய் கட்டிகளையும் இப் பக்டீரியாக்களை பயன்படுத்தி அழிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அமைந்துள்ள Duke பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இந்த உண்மை வெளியாகியுள்ளது. குறித்த ஆய்வின்போது எலிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அவ் ஆய்வு வெற்றியையும் கொடுத்துள்ளது.



## முருங்கை விதையின் அசத்தலான நன்மைகள்

காய்கறி வகைகளில் முருங்கைக்காயை பிடிக்காதவர்கள் என்று இவ்வுலகில் யாரும் இருக்க முடியாது. ஏனெனில் முருங்கை விதையின் ருசியானது அவ்வளவு அற்புதமாக இருக்கும். முருங்கை விதை களில் உள்ள அபார ருசியைப் பற்றி நம் அனைவருக்குமே தெரியும்.

ஆனால் அதில் உள்ள சத்துக்கள் மூலம் நமக்குக் கிடைக்கும் அற்புதமான நன்மைகளை பற்றி நாம் அனைவருக்கும் தெரியாது அல்லவா? இப்போது அதை தெரிந்துகொள்வோம்.

தினமும் இரவில் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள், முருங்கை விதை களை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், தூக் கமின்மை பிரச்சினை நீங்கி நிம்மதியான உறக்கம் கிடைக்கும். முருங்கை விதை கள் அதிகமான கல்சியம் சத்துக்களைக் கொண்டுள்ளதால், நமது மூட்டுகளின் இணைப்புகளில் ஏற்படும் வலியை போக்கும் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. மேலும் ஆர்த்ரைடீஸ் நோய் வராமல் தடுக்கிறது. முருங்கை விதைகளிலிருந்து பிரித்தெடுக்கப்படும் எண்ணெயில் 30 வகையான அன்டி ஒக்ஸிடென்ட்கள் இருக்கின்றது. இவை நமது உடம்பில் உள்ள செல்கள் மட்டும் உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

நமது உடம்பின் ரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் தன்மையை முருங்கை விதை பெற்றுள்ளதால், சர்க்கரை நோய் நம்மை தாக்காமல் பாதுகாக்கிறது. முருங்கை விதைகளை நாம் தினமும் உணவில் சேர்த்துக்கொண்டால், நமக்கு ஏற்படும் செல் சிதைவை தடுத்து, புதிய செல்கள் உருவாக்கி, புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கிறது. இதயத்தில் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் சிறந்த மருந்தாக இந்த முருங்கை விதைகள் உள்ளது. மேலும் இவை இதயத்தில் படியும் கொழுப்புகளை வெளியேற்றி, இதயம் தொடர்பான நோய்கள் வராமல் தடுக்கச்செய்கிறது.



# அறிவியல் உலகம்

## 3600 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கல்லறை கண்டுபிடிப்பு



எகிப்தில் 3600 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கல்லறை ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எகிப்தில் Gebel el Silsila பகுதியில் ஆயிரம் ஆண்டுகளாக மறைந்து கிடக்கும் பண்டையகால எகிப்திய கல்லறையை தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அதில் பண்டைய காலத்தில் வாழ்ந்த குடும்பங்கள், குழந்தைகள், அதைத்தொடர்ந்து முதலைகள் மற்றும் ஆடுகள் போன்றவை இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதை Lund பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அவர்கள் கூறுகையில், 3600 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த குடும்பங்கள் இருந்துள்ளது. இது மூன்றாம் ஆட்சிக்காலத்தில் அல்லது இரண்டாம் ஆட்சிக்காலத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறியுள்ளனர். இதைப் பார்க்கையில் அவர்கள் கடினமான உழைப்பிற்கு உட்படுத்தப்பட்டிருப்பது போல் தெரிகிறது என கூறியுள்ளனர். மேலும் இங்கு கோபுரங்கள் போன்றவை எல்லாம் காணப்படுகிறது. அதனால் கண்டிப்பாக பொதுமக்கள் மற்றும் விலங்குகள் வாழ்ந்திருக்கிலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால் தற்போது ஒரு தலை இல்லாமல் முதலையின் எலும்புக்கூடு மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். மேலும் அங்கு சடலங்கள் மற்றும் எகிப்திய கடவுளின் புகைப்படமும் கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## ப்ளூட்டோவில் இராட்சத பனிக்கோபுரங்கள்



சூரியக் குடும்பத்திலுள்ள பல்வேறு கோள்களையும் நாசா நிறுவனம் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வருகின்றமை தெரிந்ததே. இதேபோன்று ப்ளூட்டோ கோளினை கடந்த 2015ம் ஆண்டு முதல் ஆய்வுக்குட்படுத்தி வருகின்றது. இவ்வாறான நிலையில் அங்கு பனிக்கட்டிகளால் ஆன கோபுரங்கள் போன்ற அமைப்புக்கள் காணப்படுகின்றமைக்கான புகைப்படச்சான்று தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இக்கோபுரங்களில் சிலது 500 மீற்றர்கள் வரை உயரமானவை என நாசா தெரிவித்துள்ளது.

சூரியக் குடும்பத்தில் காணப்படும் கோள்களுள் பூமிக்கு அடுத்ததாக ப்ளூட்டோவில் இவ்வாறான பனிக் கோபுரங்கள் அல்லது பனி மலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள அனைத்து பனிக்கோபுரங்களும் சூரியன் தோன்றும் திசையில் சரிந்து காணப்படுகின்றமை ஆச்சரியப்பட வைப்பதாக இருக்கின்றது. இக் கண்டுபிடிப்பினைத் தொடர்ந்து அங்கு உயிரினங்கள் வாழ்வதற்கு ஏதுவான காரணிகள் தொடர்பில் ஆய்வுகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## Nokia 8 Supreme ஸ்மார்ட் கைப்பேசி அறிமுகம்



அடுத்த மாதம் இடம்பெறவுள்ள Mobile World Congress நிகழ்வில் நொக்கியா நிறுவனம் தனது Nokia6 எனும் புதிய அன்ரொயிட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில் மற்றுமொரு கைப்பேசியினை அறிமுகம் செய்து வைக்கவுள்ளதாக மற்றுமொரு தகவல் தற்போது வெளியாகியுள்ளது. Nokia 8 Supreme எனும் இக் கைப்பேசியானது 5.7 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய Quad HD தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

அத்துடன் Qualcomm Snapdragon 821 Processor அல்லது புதிய Snap dragon 835 Processor, பிரதான நினைவகமாக 4GB அல்லது 6GB RAM, 64GB அல்லது 128GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் OIS மற்றும் Super EIS தொழில் நுட்பத்தினைக்கொண்ட இரு பிரதான கெமராக்களும் தரப்பட்டுள்ளன. இக் கெமராக்கள் ஒவ்வொன்றும் தலா 24 மெகாபிக்சல்கள், 12 மெகாபிக்சல்களை உடையதாகக் காணப்படுகின்றது. எனினும் இக் கைப்பேசியின் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

## புதிய வசதியினை அறிமுகம் செய்யும் பேஸ்புக்

உலகின் முன்னணி வீடியோ பகிரும் தளமாக விளங்கும் யூடியூப் ஆனது வீடியோக்களின் இடையே விளம்பரங்களையும் காட்சிப்படுத்தி வருகின்றது. இந்த விளம்பரங்கள் மூலம் வீடியோக்களை தரவேற்றம் செய்பவர்களும் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதேபோன்றதொரு வசதியினை பேஸ்புக் நிறுவனம் தரவுள்ளது. இதன்படி பேஸ்புக்கில் தரவேற்றம் செய்யும் வீடியோக்களின் இடையே விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளது. எனினும் இவ்வாறு விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படுவதற்கு குறித்த வீடியோக்களுக்கு சில சிறப்பியல்புகள் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வீடியோக்கள் குறைந்தது 90 செக்கன்கள் ஓடக் கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறான வீடியோக்களில் 20 செக்கன்களின் பின்னர் விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்படும். மேலும் குறித்த விளம்பரங்கள் அனைத்தும் பாரம்பரிய தொலைக்காட்சிகளில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களைப்போன்றே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் விளம்பரங்களின் ஊடாக வீடியோக்களை தரவேற்றம் செய்பவர்களுக்கு 55 சதவீத இலாபத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நாள்தோறும் பேஸ்புக் ஊடாக பில்லியன் கணக்கான வீடியோக்கள் பார்வையிடப்படுவது குறிப்பிடத்தக்கது.


## சாதனை படைத்த சம்சுங்



இலத்திரனியல் உலகைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் Consumer Electronics Show (CES) நிகழ்வு இடம்பெறுவது வழக்கமாகும். இந்நிகழ்வின்போது பல இலத்திரனியல் சாதன வடிவமைப்பு நிறுவனங்களும் கலந்துகொண்டு அந்த ஆண்டு விற்பனைக்கு தயாராகவுள்ள பொருட்களை அறிமுகம் செய்தல் அல்லது புதிதாக வடிவமைக்கக் காத்திருக்கும் சாதனங்கள் தொடர்பிலான தகவல்களைத் தெரிவிக்கும். இதுதவிர தலைசிறந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு விருது களும் வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வருடத்திற்கான CES நிகழ்வானது அமெரிக்காவின் Las Vegas நகரில் இடம்பெற்று வருகின்றது. இதில் சம்சுங் சார்பாக 3880இற்கும் அதிகமான காட்சிப்படுத்துபவர்கள் பங்கு பற்றியுள்ளனர். இதன்போது சம்சுங் நிறுவனத்திற்கு 120 இற்கும் அதிகமான விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் QLED TV, Chromebook Plus, Pro Plus உட்பட மேலும் பல சாதனங்களுக்கான விருது களும் அடங்கும். இதேவேளை CESஆனது 50வது ஆண்டு நிறை வினைக்கொண்டாடுவதும் சுட்டிக் காட்டத்தக்கது.

## ஐபோன் வடிவில் துப்பாக்கி



அமெரிக்காவில் மின்னெ கோடாவை சேர்ந்த ஒரு நிறுவனம் சமீபத்தில் வெளியான ஐபோன் 7 தொலைபேசி வடிவில் கைத்துப்பாக்கி தயாரித்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் பொலிஸாருக்கு ஐபோன் வடிவி லான துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பெல்ஜியம் பொலிஸார் இந்த துப்பாக்கி குறித்து ஐரோப்பிய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். 'ஐபோன்' வடிவிலான கைத்துப்பாக்கி அடுத்த வாரம் சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. அதற்கான முன்பதிவுகள் அதிக அளவில் கிடைத்துள்ளது. தற்போது அமெரிக்காவில் அதே வடிவிலான துப்பாக்கி விற்பனைக்கு வரும் பட்சத்தில் அது கண்டம் விட்டு ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும் சூழ்நிலை உள்ளது. மேலும் இந்த துப்பாக்கியானது தீவிரவாதிகளின் கைகளில் கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும், எனவே மக்கள் மற்றும் பொலிஸார் எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கூகுள் தயாரித்த ட்ரோன் திட்டத்திற்கு மூடு விழா



இணைய ஜாம்பவானாகத் திகழும் கூகுள் நிறுவனம் பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகம் செய்து வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது. இவற்றின் வரிசையில் ட்ரோன் வகை விமானங்களின் உதவியுடன் இணைய வலையமைப்பு சேவையினை வழங்கத் திட்டமிட்டிருந்தது. இதற்கான பணிகள் 2014ம் ஆண்டின் பிற்பகுதியில் இருந்து Titan Aero space எனும் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டிருந்தது.

இதேவேளை 2015ம் ஆண்டில் Titan Aero space நிறுவனமானது தனது தாய் நிறுவனமான Alphabet நிறுவனத்திலிருந்து பிரிந்தது. இதன் காரணமாகவும், கூகுள் நிறுவனத்தின் பொறியியல் பிரிவில் பணியாற்றுபவர்கள் ஏனைய பகுதிகளில் பணிபுரிய வேண்டியிருப்பதன் காரணமாகவும் குறித்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது. எனினும் பலூன்கள் மூலமாக பின்தங்கிய மற்றும் தொலைதூர இடங்களுக்கு இணைய சேவையினை வழங்கும் Project Loon திட்டத்தில் கூகுள் நிறுவனம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது.

## சூரியனின் மேற்பரப்பில் பாரிய மாற்றம்

சூரியனின் மேற்பரப்பில் பெரிய நீண்ட கறுப்பு பள்ளம் ஏற்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளதாக நாசா நிறுவனம் அறிவித்துள்ளது. சூரியனின் மேற்பரப்பில் கீழ் இருந்து மேல் நோக்கி கறுப்பு நிறத்திலான இந்த பள்ளம் காணப்படுவதாக கண்காணிப்பை மேற்கொண்டு வரும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் சூரியனில் இருந்து பூமியின் பக்கத்தை நோக்கி தீச்சுடர் வெளிப்பட்டது. இது தொடர்பாக நடத்திய ஆய்வில் இந்த கறுப்புப்புள்ளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2ஆம் மற்றும் 5ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. சூரியனில் ஏற்பட்ட இந்த மாற்றம் நீடித்தால், பூமிக்கு மட்டுமல்ல முழு கோள் மண்டலத்திற்கும் ஆபத்து ஏற்படலாம் என நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். முதல் ஆபத்து பூமிக்கு மேல் இருக்கும் செயற்கை கோள்களுக்கு ஏற்படும் என்பதுடன் அவை அழிந்து போகக்கூடும். உலகம் முழுவதில் உள்ள மின்மாற்றிகள், பாரிய நன்னீர் குழாய்கள் வெடிக்கலாம் எனவும் ரேடார் கருவிகள் செயலிழக்கலாம் எனவும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் செயலிழக்கலாம் எனவும் இணையத்தளம் செயலிழக்கலாம் எனவும் வான் பரப்பில் கதிர்வீச்சு ஏற்படலாம் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# விளையாட்டு உலகம்

## உலகளவில் அதிக சம்பளம் பெறும் கால்பந்து வீரர்



ஆர்ஜெண்டினா வீரர் கார்லோஸ் டெவெஸ் (Carlos Tevez) தான் தற்போதைய நிலவரப்படி அதிக ஊதியம் பெறுபவராக திகழ்கிறார். சீன கால்பந்து கிளப்பான சாங்காய் சென்ஹுவாவுடன் சமீபத்தில் ஒப்பந்தம்செய்துள்ளார்கார்லோஸ். இதற்காக அவருக்கு ஒரு சீசனுக்கு 40 மில்லியன் டொலர் அதாவது இலங்கை மதிப்பில் ரு.599 கோடி (ரு.5990600000.00) சம்பளம் வழங்கப்படவுள்ளது. ஆர்ஜெண்டினாவின் போகா ஜூனியர்ஸ் அணியிலிருந்து கார்லோஸ் தற்போது மாறியுள்ளார். இதையடுத்து கால்பந்து உலகில் அதிக சம்பளம் பெற்ற வீரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் கார்லோஸ். குறித்த கால்பந்து குழுமத்துடன் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தில் இணைந்திருக்கும் கார்லோஸுக்கு அந்த குழுமம் நிமிடத்திற்கு 80 டொலர் வரை ஊதியமாக வழங்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

## இவானோவிச் டென்னிஸிலிருந்து ஓய்வு



செர்பியா அழகுப் புயல் அனா இவானோவிச் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். உலக தர உயர்நிலைப் போட்டிகளில் தன்னால் இனி விளையாட முடியாது என்பதால் அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். இவர் கடந்த 2008ம் ஆண்டு பிரெஞ்ச் ஓபன் டென்னிஸில் சம்பியன் பட்டம் பெற்று தரவரிசையில் முதலிடம் பெற்றார். இதன் மூலம் கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெறும் முதல் செர்பிய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். கடந்த 2015ம் ஆண்டு டென்னிஸில் அதிகம் பேர் ரசிக்கும் வீராங்கனை யார் என்று ஆங்கில பத்திரிகை ஒன்று நடத்திய கருத்துக்கணிப்பில் இவர் முதலிடத்தைப் பிடித்திருந்தார். முன்னணி வீராங்கனையாக வலம் வந்த இவானோவிச் சமீபகாலமாக தொடர் தோல்விகளால் தரவரிசையில் பின் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக தனது டுவிட்டர் பக்கத்தில் அறிவித்துள்ளார். தற்போது ஓய்வை அறிவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறியுள்ள இவானோவிச், இது ஒரு கடினமான முடிவு என்றும் தெரிவித்துள்ளார்.

## புதிய உலக சாதனை படைத்தார் சமித்



117 ஆண்டு உலக சாதனையை முறியடித்து குஜராத் கிரிக்கெட் வீரர் சமித் புதிய உலக சாதனை படைத்துள்ளார். குஜராத், ஒடிசா ஆகிய உள்ளூர் அணிகளுக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை காலிறுதிப் போட்டி ஜெய்ப்பூர் சவாய் மான் சிங் மைதானத்தில் நடந்தது. இந்தப் போட்டியில் குஜராத் வீரரான சமித் அபாரமாக ஆடி 723 பந்துகளில் முச்சதம் அதாவது 359 ஓட்டங்கள் (45 பவுண்டரி, 1 சிக்ஸ்) எடுத்திருந்தார். அபாரமாக ஆடிய சமித் தொடக்க ஆட்டநாயகனாக களமிறங்கி கடைசிவரை ஆட்டமிழக்காமல் அதிக ஓட்டங்கள் எடுத்து உலக சாதனை புரிந்துள்ளார். இதுவரை, 117 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1899ம் ஆண்டு சாமர்செட் அணிக்கு எதிராக சர்ரே அணி தொடக்க வீரர் பாபி அபெல் ஆட்டமிழக்காமல் 357 ஓட்டங்கள் விளாசியதே உலக சாதனையாக இருந்து வந்தது.

இந்நிலையில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக எவராலும் எட்டிப்பிடிக்க முடியாமல் இருந்த இந்த சாதனையை தற்போது குஜராத் வீரர் சமித் முறியடித்து சாதனையாளராக வலம் வருகிறார். மேலும், பிரியங் பன்சலுக்குப்பின், ரஞ்சியில் முச்சதம் அடித்த இரண்டாவது குஜராத் வீரர் என்ற சாதனையை சமித் எட்டியதுடன் அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் 5வது இடம் பிடித்துள்ளார். மேலும், இன்னிங்ஸில் அதிகநேரம் அவுட்டாகாமல் துடுப்பெடுத்தாடியவர்களின் பட்டியலில் சமித் (964நிமிடங்கள்) மூன்றாவது இடத்தை பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து சமித் கோஹெல் கூறியதாவது, நான் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் வருமான வரித் துறை மற்றும் தேனா வங்கியில் வேலை வாய்ப்பு கோரி விண்ணப்பித்துள்ளேன். இந்த உலக சாதனை அதற்கு உதவும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.



## சர்ச்சையில் சிக்கிய சானியா மிர்சா

சமீபத்தில் முகமது சமி அவரது மனைவியுடன் இருக்கும் படத்தை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து கொண்டார். மதத்திற்கு எதிரான வகையில் முகமது சமியின் மனைவி ஆடை அணிந்திருந்ததாக விமர்சனங்கள் எழுந்தது. இதற்கு என் மனைவியும் மகளும்தான் என் வாழ்க்கை. எனவே என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது எனக்கு நன்றாகவே தெரியும் என பதிலடி கொடுத்திருந்தார். இதேபோன்று பிரபல டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சாவுக்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளது. கடந்த இரு வாரங்களுக்கு முன்பு இவர் தன்னுடைய புகைப்படத்தை பதிவேற்றியுள்ளார். லட்சக்கணக்கான மக்கள் லைக் செய்திருந்தாலும் இஸ்லாம் முறைப்படி முக்காடு அணியவில்லை, உடலை முழுவதுமாக மறைக்கவில்லை என பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## கங்குலிக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர் கைது



இந்திய அணியின் முன்னாள் வீரர் கங்குலிக்கு கொலை மிரட்டல் விடுத்த நபர்ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலியின் தாயாருக்கும் சமீபத்தில் கொலை மிரட்டல் கடிதம் ஒன்று வந்தது. அதில் மேற்கு வங்கத்தில் Vidyasagar Universityக்கு தன்னுடைய மகன் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளான். அவன் அங்கு வந்தால் மீண்டும் உயிருடன் திரும்பமாட்டார் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கங்குலி பொலிசாரிடம் புகார் தெரிவித்திருந்தார். பொலிசார் நடத்திய தீவிர விசாரணையில் Midnapore மாவட்டத்தின் Arabinda Nagar பகுதியைச்சேர்ந்த Nirmalya Samanta என்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் நடத்திய விசாரணையில், இதற்குக் காரணம் மேற்கு வங்க கிரிக்கெட் சங்கத்தின் பிரதிநிதியான Ashish Chakrabortyதான் என்று செய்திகள் வெளியாகியுள்ளது. மேலும் Nirmalya Samanta ஒரு செய்தித்தாள் விற்பனையாளர் என்று கூறப்படுகிறது.

## பொண்டிங் அறிவித்த பலமான அவுஸ்திரேலிய அணி



இந்தியாவுக்கு எதிராக 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடும் அவுஸ்திரேலிய அணியை முன்னாள் தலைவரான ரிக்கி பொண்டிங் தெரிவு செய்துள்ளார். அடுத்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலிய அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதற்கான அதிகாரப்பூர்வ அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட உள்ளது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவானும், தலைவருமான ரிக்கி பொண்டிங் தனது அவுஸ்திரேலிய அணியை அறிவித்துள்ளார். ரிக்கி பொண்டிங்கின் அவுஸ்திரேலிய அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள், டேவிட் வார்னர், ரென்ஷா, கவாஜா, ஸ்மித், ஹேண்ட்ஸ்காம்ப், மிட்செல் மார்ஷ், மாத்யூ வடே, மிட்செல் ஸ்டார்க், ஸ்டீவ் ஓகீபே, ஹசில்வுட், நாதன் லயன், ஷேன் மார்ஷ், ஜேக்சன் பேர்ட், கிளென் மேக்ஸ்வெல், ட்ராவிஸ் ஹெட், ஆஷ்டோன் அகர். நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 23ம் திகதி தொடங்குகிறது.

## மயிரிழையில் தப்பிய கிரிக்கெட் வீரர்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வீரரான ஷபூர் ஷத்ரான் சென்ற வாகனம் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். ஆப்கானிஸ்தான் வேகப்பந்து வீச்சாளரான ஷபூர் ஷத்ரான்(29). கடைசியாக அயர்லாந்து அணிக்கெதிராக கடந்த ஆண்டு ஜூலை 12ம் திகதி சர்வதேச போட்டியில் விளையாடிய நிலையில் தற்போதும் அந்த அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் நள்ளிரவு தனது சகோதரரை அழைத்துக் கொண்டு காபூலில் உள்ள பக்ராமி பகுதி அருகே காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவரது காரை வழிமறித்த சில மர்ம நபர்கள் காரின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில், பல குண்டுகள் காரை தாக்கியபோதும், மயிரிழையில் அதிஷ்டவசமாக இருவரும் உயிர் தப்பியுள்ளனர். இதுவரை, ஷபூர் மீது தாக்குதல் நடத்தியதற்கு எந்த குழுவோ அல்லது தனிநபரோ பொறுப்பேற்கவில்லை என்றபோதும், ஷபூர் ஷத்ரான் மீது ஏற்கனவே இதுபோன்ற தாக்குதல்கள் நடந்துள்ளன என்று கூறப்படுகிறது.

## முர்ரேவுக்கு முடிவு கட்டிய ஜோகோவிச்



கதார் ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் ஆண்டி முர்ரேவை வீழ்த்தி நோவாக் ஜோகோவிச்சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இந்த வெற்றியின் மூலம், கடந்த 28 போட்டிகளாக தொடர்ந்து வெற்றிபெற்று வந்த முர்ரேவின் சாதனைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் ஜோகோவிச். முன்னதாக மூன்று மணிநேரம் நடந்த போட்டியின் முடிவில் 6-3, 5-7, 6-4 என்ற செட்களில் ஆண்டி முர்ரேவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் நோவாக் ஜோகோவிச். தோல்விக்குப் பின்னரும் இங்கிலாந்தைச் சேர்ந்த ஆண்டி முர்ரே தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். செர்பிய நாட்டைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிச் இரண்டாம் இடத்தில் உளளார்.

# உலகச் செய்திகள்

## சிறுவர்களுக்கு பாடம் நடத்தும் போகோ ஹராம்



பணயக்கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருக்கும் பெண்களை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது எப்படி என போகோஹராம் தீவிரவாத அமைப்பு சிறுவர்களுக்கு பாடம் நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ஈராக் மற்றும் சிரியாவில் இயங்கிவரும் ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு போன்று தாங்களும் செயற்பட்டு வருவதாகக் கூறும் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பு, தற்போது பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது குறித்து சிறுவர்களுக்கு பாடம் நடத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெருமளவு சிறுவர்களை களமிறக்கி அதற்கென குழுக்களையே உருவாக்கி தாக்குதல் பயிற்சியும் அளித்து வருகிறது போகோ ஹராம். குறித்த சிறுவர் படை ஒன்றில் இருந்து தப்பி வந்த 15 வயது சிறுவன் அஹமது, தமக்கு நேர்ந்த துன்பங்கள் மற்றும் அவலங்களை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளான். போகோ ஹராம் தீவிரவாதிகளால் பணயக்கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் சிலர் அங்கிருந்து தப்பியபோது அவர்களை துரத்திச் செல்வதாகக் கூறி, அஹமதும் தப்பியுள்ளான். தொடர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் சிறுமிகள் மற்றும் இளம் பெண்கள் வலி பொறுக்க முடியாமல் உதவி கேட்டு அழுவார்கள். ஆனால் எவ்வித உதவியும் அவர்களுக்கு கிடைப்பதில்லை. மட்டுமல்ல அவர்கள்படும்துயரங்களை போகோ ஹராம் தீவிரவாதிகள் கண்டுகொள்வதில்லை. தங்களுக்கு ஒத்துழைக்காத சிறுமிகள் மற்றும் இளம்பெண்கள் சிலநேரம் கடுமையாக தாக்கப்படும் சூழலும் ஏற்படும். சிலநேரம் துப்பாக்கி முனையில் பலாத்காரம் நடப்பதும் உண்டு என அஹமது தெரிவித்துள்ளான். போகோ ஹராம் தீவிரவாதிகள் அளிக்கும் பணியை திறம்பட செய்து முடித்தால் விருப்பமான பெண்களுடன் உல்லாசத்தில் ஏற்படலாம் என்பதும் அங்கிருக்கும் புது விதி எனவும். இதற்கென்று பாலியல் அடிமைகளை போகோ ஹராம் தீவிரவாதிகள் உருவாக்கி வைத்துள்ளதாகவும் உள்ளூர் ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம்



தாய்லாந்தில் விமான கண்காட்சியின் போது விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவம் பார்வையாளர்களை அதிர்ச்சியடைய வைத்தது. தாய்லாந்தில் வெகுவிமர்சையாக விமான கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதன் ஒருபகுதியாக விமானங்களின் சாகச நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் சுவீடன் நாட்டின் JAS 39 Gripen விமானம் ஒன்று பார்வையாளர்களை சந்தோசப்படுத்தும் வகையில் சாகசங்கள் பல செய்து வந்த வண்ணம் இருந்தது. குறித்த விமானத்தினை 34 வயது விமானி Dilokrit Pattavee என்பவர் இயக்கி வந்துள்ளார். திடீரென்று குறித்த விமானம் விமானியின் கட்டுப்பாட்டினை இழந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் விமானம் சாகச நிகழ்ச்சி நடத்தப்பட்ட தளத்தின் அருகாமையில் அமைந்துள்ள காட்டுப்பகுதியில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளாகியுள்ளது. விமானி குறித்த விபத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள முயற்சி மேற்கொள்ளவில்லை என தெரிய வந்துள்ளது. இதனால் சம்பவ இடத்திலேயே விமானி Dilokrit Pattavee இறந்ததாக கூறப்படுகிறது. நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கண்டு நின்ற அந்த நொடியில் தீ கோளம் போன்று விமானம் விழுந்து நொறுங்கியது குழுமியிருந்த பார்வையாளர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

## பிரான்ஸில் ஆண்களுக்கான அதிரடிச் சட்டம்



பொதுவாக வேலைக்குச் செல்லும் பெண்கள் குழந்தை பெற்றால் அவர்களுக்கு தங்கள் உடல் நலத்தை பார்த்துக்கொள்ளமற்றும்குழந்தையை பராமரித்துக் கொள்ளவும் சிறிது காலம் விடுமுறை அளிக்கப்படும். தற்போது பிரான்ஸ் நாட்டில் தந்தையாகும் நபர்களுக்கும் கட்டாய விடுமுறை அளிக்கவேண்டும் என அந்நாட்டு அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அதன்படி இந்த சட்டம் அமுலுக்கு வந்தால் 11 நாள் தொடர் விடுப்பு விட்டு வரும் அல்லது ஆறு வார தொடர் விடுப்பை தந்தையாகும் ஆண்கள் எடுத்துக்கொள்ளலாம்.

இந்த விடுப்பு முக்கியமாக ஆண்கள் வீட்டு வேலைகளை செய்ய பழகவேண்டும் மற்றும் தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக விடப்படுகிறது. பிரான்ஸ் நாட்டைப் பொறுத்தவரை ஆண்களை விட பெண்கள் 33 சதவீதம் குறைவான நேரமே பணியில் ஈடுபடுகிறார்கள். மேலும், ஆண்களை விட 25 சதவீதம் குறைவாக சம்பாதிக்கும் பெண்கள் வீட்டு வேலைகளை ஆண்களை விட 71 சதவீதம் அதிகம் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒபாமாவின் மகள்களுக்கு புஷ் பிள்ளைகள் கடிதம்



ஒபாமாவின் மகள்கள் சாஷா மற்றும் மாலியாவுக்கு, அமெரிக்க முன்னாள் அதிபர் புஷ்ஷின் மகள்கள் பார்பரா மற்றும் ஜென்னா புஷ் ஆகிய இருவரும் உணர்வுபூர்வ கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அதில் அமெரிக்க முன்னாள் முதல் குடிமகனின் வாரிசுகள் குழுவுக்கு இருவரையும் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இக்கடிதம் டைம் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் சாராம்சம் பின்வருமாறு:- "நீங்கள் குழந்தையாக இருந்து, கருணைமிக்க மற்றும் எளிமையான இளம்பெண்களாக மாறுவதை நாங்கள் கண்கூடாகக் கண்டோம். அமெரிக்க முன்னாள் முதல் குடிமகனின் வாரிசுகள் குழுவுக்கு உங்களை வரவேற்கிறோம். இது நீங்கள் எதிர்பார்த்திராத தருணம். ஆனால் முன்னோக்கி செல்லத்தான் வேண்டும். உங்களின் புகழ்பெற்ற, பெருமை வாய்ந்த பெற்றோரின் நிழலுக்குப் பின்னால்தான் உங்களின் வாழ்க்கைக் கதை எழுதப்படும். உங்களின் கடந்த 8 ஆண்டுகளின் அனுபவத்தைக் கடைசிவரை நீங்கள் சுமந்து செல்ல வேண்டி இருக்கும். (ஒபாமாவின் பதவிக்கலாலம் 8 ஆண்டுகள். 2008ல் ஒபாமா பதவியேற்றபோது, அதிபராக இருந்த புஷ்ஷின் மகள்கள் பார்பரா மற்றும் ஜென்னா புஷ் இருவரும் இளம்பெண்ணாக வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறினர்.)

இந்த எட்டு வருடத்தில் நீங்கள் நிறைய செய்திருக்கிறீர்கள். நிறைய பார்த்திருப்பீர்கள். சாஷாவுக்கு இப்போது 15 வயது. மாலியாவுக்கு 18. கடந்த இரண்டு காலகட்டத்தின் அனுபவங்களை உங்களின் இதயத்துக்கு அருகில் பத்திரமாக வைத்திருங்கள். வெள்ளை மாளிகையை உங்களின் வீடாகமாற்றிய ஊழியர்களிடமும், உங்களைப் பாதுகாத்த பணியாளர்களிடமும் தொடர்பிலேயே இருங்கள். மாலியா ஹார்வர்ட் கல்லூரி வாழ்க்கையில் காலடி எடுத்துவைக்க உள்ளாய். சாஷா வோஷிங்டன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறாய். இருவரும் இந்த இளமைப் பருவத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்.

உங்களின் இளம் தோள்களில் உலகத்தின் பாரம் இறங்கப்போவதில்லை. உணர்வுகளை வெளிப்படுத்துங்கள். நீங்கள் யாரென உணருங்கள். தவறு செய்யுங்கள். அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். கல்லூரி வாழ்க்கையை அனுபவியுங்கள். உலகத்துக்கே தெரியும். நாங்கள் அதைச் செய்தோம். உண்மையான மற்றும் பாதுகாப்பான நண்பர்களை அருகிலேயே வைத்திருங்கள். வெள்ளை மாளிகையின் அனைத்து அழுத்தங்களிலும் வாழ்ந்து பழகியிருப்பீர்கள். நீங்கள் இதுவரை சந்தித்திராத மக்களிடம் இருந்துகூட, உங்கள் பெற்றோர் மீதான கடுமையான விமர்சனங்களைக் கேட்டிருப்பீர்கள். உங்களை நாட்டின் முதல் குடிமக்களாக ஆக்கியோர் பெற்றோர். அவர்கள் இந்த உலகத்தை மட்டும் உங்களுக்குக் காட்டவில்லை. அதைத் தந்திருக்கின்றனர். உங்களின் அடுத்த அத்தியாயத்தை இனிதே தொடங்குங்கள்". இவ்வாறு புஷ் சகோதரிகள், ஒபாமா சகோதரிகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

- The hindu

## மறைக்கப்பட்டிருந்த போதைப்பொருள் ஆய்வகம்




கனடாவின் மார்க்கம் பகுதியில் போதை பொருள் ஆய்வகம் ஒன்று நடத்திய குற்றத்திற்காக ஒரு குடும்பம் கைதாகியுள்ளது. மார்க்கம் பகுதியில் கணவன், மனைவி மற்றும் இரண்டு வாலிப மகன்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. வீட்டிற்குள் போதை பொருள் ஆய்வகம் ஒன்றை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். திருட்டு சம்பவம் தொடர்பாக ஒரு தேடுதல் ஆணையை நிறைவேற்ற மார்க்கம், ஒன்ராறியோவில் அமைந்துள்ள வீடொன்றிற்குச் சென்றபோது இந்த ஆய்வகம் கண்டுபிடிக்கப்பட்டதாக யோர்க் பிராந்திய பொலிசார் தெரிவித்தனர். இது ஒரு இரகசிய மருந்து ஆய்வகம் என பொலிசார் நம்புகின்றனர். குறிப்பிட்ட வீடு ஆய்வகம் ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என விசாரணையாளர்கள் உறுதிப்படுத்தினர். பாதுகாப்பு கருதி வீதி மூடப்பட்டுவிட்டது. 48வயது மனிதன், 44வயதுடைய பெண் மற்றும் 16 மற்றும் 14வயதுடைய பையன்கள் இருவர் மீது கட்டுப்படுத்தப்பட்ட பொருளை உற்பத்தி செய்தமை மற்றும் கடத்தல் நோக்கம் ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டது. இரகசிய போதை மருந்து ஆய்வகங்கள் தீவிர அபாயங்களை ஏற்படுத்தக்கூடியவை எனவும் அபாயகரமான இரசாயனப்பொருட்கள் உபயோகிக்கப்படுவதால் தீ மற்றும் வெடிப்புக்கள் போன்ற விளைவுகள் கூட ஏற்படலாம் என பொலிசார் தெரிவித்தனர்.

## தீவிரவாதியுடன் ஏஞ்சலா மெர்க்கல் செல்பியா?

ஜேர்மனியின் சான்சலர் Angela Merkel (62) கடந்தாண்டு பெர்லினில் உள்ள அகதிகள் முகாமிற்குச் சென்றார். அப்போது சிரியாவிலிருந்து வந்து அங்கு தங்கி வேலை பார்த்துக்கொண்டிருக்கும் Anas Modamani (19) என்னும் இளைஞர் அவருடன் செல்பி எடுத்துள்ளார். இந்த செல்பியானது பின்னாளில் Anas க்கு எவ்வளவு பெரிய பிரச்சினையை ஏற்படுத்தும் என அவருக்கு அப்போது தெரியவில்லை. இந்த புகைப்படம் பின்னர் பேஸ்புக். ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களில் பரவத் தொடங்கியது.


சாதாரணமாக பரவவில்லை. பலர் Anas முகமூடி அணிந்திருப்பது போல போட்டோ ஷொப் செய்தும் மற்றும் புகைப்படத்தில் Angela வுடன் இருக்கும் இந்த இளைஞன் ஒரு பயங்கர தீவிரவாதி. பெல்ஜியம் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்தியது இந்த நபர் தான் எனவும் தகவல்கள் பரவின. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான இளைஞர் Anas தன் வழக்கறிஞர் மூலம் பேஸ்புக் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்.

இதுகுறித்து அவரின் வழக்கறிஞர் Jun கூறுகையில், இந்த மாதிரி சர்ச்சைக்குரிய மற்றும் தவறான விடயங்களை பேஸ்புக் நீக்காமல் இருப்பது கண்டனத்துக்குரியது எனக் கூறியுள்ளார். பேஸ்புக் இதை நீக்கிவிட்டதாக கூறினாலும், இது தொடர்பான வழக்கை பேஸ்புக் நிறுவனம் சந்தித்தாகவேண்டும் எனவும் Jun கூறியுள்ளார்.



# விந்தை உலகம்

## தங்க நிறத்தில் தண்ணீர் கொட்டும் நீர்வீழ்ச்சி



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் புகழ்பெற்ற யோசெமிட்டி தேசிய பூங்கா அமைந்துள்ளது. இங்கு இருக்கும் குதிரைவால் நீர்வீழ்ச்சியில் (Horsetail Falls) வருடத்தின் சில நாட்கள் ஒரு அதிசயம் நிகழும். அதாவது சூரியன் மறைகின்ற வேளையில் இந்த நீர்வீழ்ச்சியிலிருந்து தண்ணீர் பாயும்போது, சூரிய ஒளியால் நெருப்பு போன்ற மஞ்சள் மற்றும் சிவப்பு நிறத்தில் ஒளிர்கிறது. இந்த இயற்கையான நிகழ்வு 'நெருப்பு வீழ்ச்சி' என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. இந்த வருடம் நடந்த இந்த அதிசய நிகழ்வை கலிபோர்னியாவைச் சேர்ந்த Dave Gordon (37) என்னும் புகைப்படக் கலைஞர் அட்டகாசமாக படம் பிடித்துள்ளார்.


இது பற்றி அவர் கூறுகையில், வருடத்தில் சில நாட்கள் மட்டுமே இந்த அதிசயம் இங்கு நிகழும். நீர்வீழ்ச்சியில் நீரின் நிறம் நெருப்பு போல தங்க நிறத்தில் தெரிவது ஆச்சரிய நிகழ்வு தானே என அவர் கூறியுள்ளார். இதை படம் பிடிப்பது எனக்கு எப்போதும் பெருமையும் மகிழ்ச்சியையும் தருகிறது எனவும் Dave தெரிவித்துள்ளார்.

## பிரித்தானிய நாட்டிற்கு மேலும் ஒரு பெருமை




பிரித்தானியாவின் Walesல் அமைந்திருக்கும் Barafundle Bay கடற்கரையை உலகின் சிறந்த கடற்கரைகளுள் ஒன்றாக பிரபல Passport Magazine பத்திரிகை தேர்ந்தெடுத்துள்ளது. Passport Magazine பல விடயங்கள் தொடர்பாக ஆய்வு நடத்தி அதன் அறிக்கையை வெளியிடும். அதன்படி தற்போது உலகில் உள்ள சிறந்த 25 கடற்கரைகள் பட்டியலில் Barafundle Bayயும் இடம்பிடித்துள்ளது. அளவுக்கு அதிகமான 'அழகு காட்சிகள்' கொண்ட கடற்கரை என இந்த கடற்கரை வர்ணிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு Wales பகுதியில் அமைந்திருக்கும் இந்த கடற்கரையில் உணவகங்கள், கடைகள் போன்றவைகள் எல்லாம் கிடையாது. ஆனாலும் இதன் அட்டகாசமான இயற்கை அழகு தான் Barafundle Bay கடற்கரையை உலக புகழடையச் செய்துள்ளது. பல்வேறு நாடுகளிலிருந்து இந்த கடற்கரையைக் காண சுற்றுலாப் பயணிகள் அனுதினமும் வருவது கூடுதல் சிறப்பாகும்.

## ஹல்சேமா நெடுஞ்சாலை (பிலிப்பைன்ஸ்)



பிலிப்பைன்ஸ் நாட்டில் இந்த சாலை மிக உயரமான நெடுஞ்சாலை ஆகும். இது Baguio to Bontoc நகரங்களை இணைக்கின்றன. வழுவழுப்பான இந்த சாலைகள் சரியான பராமரிப்பு இன்றி இருந்து வருகிறது. இதனால், நிறைய விபத்துக்கள் நடக்கின்றது.

## லக்சர்–அல்–ஹுர்காட சாலை (எகிப்து)



லக்சர் சாலையானது 299 மைல் தூரம் வரை நீர் பாதையைக் கொண்டது. இந்த சாலையின் நடுவில் நிறைய கடத்தல், கொள்ளை, கொலை சம்பவங்கள் நடக்கின்றன. இரவில் இந்த சாலையில் பயணிப்பது மிகவும் ஆபத்தானது.
















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 15.01.2017 அன்று வெளியிடப்பட்டது.